கடவுள் துணை

# செந்தமிழ்.

தொகுதி-எ.] சௌமிய ஞு புரட்டாசிமீ [பகுதி-கக.

## தமிழ்ப்பழஞ்சரிதம்.

(முற்றொடர்ச்சி.)

இதுகாறும் தமிழ்மக்கள் ஆரியர்கலப்பின்றிவாழ்ந்த காலநிலையைப்பற்றிக் கூறினும். இனி, அவ்வாரியர் தமிழ்மக்களோடுகலந்த காலநிலையைப்பற்றி ஆராய்வாம். ஆரியர் தாம் பூர்வம் தங்கிநின்ற ஆரியாவர்த்தத்திற் பல்கிப்பெருத்து வளரவே, அவரால் முன் பாவபூமியாகக்கருதப்பட்ட விந்தியத்தின்றென்பாகமும் ஆரியர்க்கு இப்போது உவப்பானதாயிற்று. ஆரியக்கலப்பேயின்றித் தமிழர் தனிமையாகவாழ்ந்துவந்த விந்தமலையின்றென்பகுதி வளமிகுதியும் வாசயோக்கியமுமான பெருநிலமாதல்நோக்கி ஆண்டுந் தங்கள் ஆட்சியைச் செலுத்த ஆரியர் முயல்வாராயினர். ஐதரேயப் பிராம்மணத்தில், விசுவாமித்திரர் தம்மக்களைச் சபித்தபோது அவர்கள் ஆரியர் இகழ்ந்தவிந்தத்தின்றென்பாகத்தே நாடுகள் ஸ்தாபித்து ஆண்டுவந்தனரென்று கூறப்படுதலே அவரது தென்றிசைப் பிரவேசத்துக்கு ஆரம்பமென்பது தெரியவரும். இதற்குப்பின், வடபுலத்தினின்றும் ஆரியமக்கள் பலரைத்தென்பாகத்தே குடியேற்றியவரில் பிரபலமானவர் அகத்தியமுனிவர்.

இம்முனிவர் இராமனுக்குத் தண்டகாரணியவரலாற்றைக் கூறும்போது தாம் ஆரியமுனிவர் பலரை அவ்வாரண்ணியத்திற் குடியேற்றி யதனைச்செழிக்கவைத்ததாகக் கூறுதல் இராமாய

ணத்தே யறியக்கிடந்தது; இஃதன்றியும் அக்குறுமுனிவர் வடபா லிருந்த ஆரியர் பலரை ஈண்டுக் குடியேற்றிய செய்தி தொல்காப் பியப்பாயிரவுரையுள், நச்சினார்க்கினியர் "துவரா பதிப்போந்து நில ங்கடந்த நெடுமுடியண்ணல்வழிக்கண் அரசர்பதினெண்மரையும். பதினெண்குடிவேளிருள்ளிட்டாரையும் அருவாளரையும் கொண் டுபோந்து காடுகெடுத்து நாடாக்கிப் பொதியின்கண்ணிருந்து" எனக்கூறுமாற்றானுந் தெளியலாகும். இவ்வாறு ஆரியர் கங்கை நாடுநீங்கி விந்தத்தின்றென்பகுதியில் வியாபித்தகாலத்து அன்னோர் வருகையைத் தமிழ்மக்கள் உவந்தேற்றுக்கொள்ளாது பகைமை பாராட்டியமையால், நீண்டகாலம் அவ்வாரியர் நாட்டின்கணின்றிக் காட்டில் வசித்துவந்தனர். இவ்வுண்மை ரிஷிகள் தண்டகாரண் ணியத்தும், நைமிசாரண்ணியத்தும் வதிந்துவந்தனரென்று இதி காச புராணங்கள், கூறுதலால் விளங்கிநின்றது. இஃதன்றியும், ஆரியரும் தமிழ்மக்களும், இத்தென்னாட்டில் நீண்டநாள் ஒற்றுமை யுடன்கூடியிருக்கவில்லையென்பது கடைச்சங்கக் காலத்தேயிருந்த ஆரியப்படைதந்த நெடுஞ்செழியன், சேரன்செங்குட்டுவன் முத லியோரது சரிதங்களையாராய்வதில் வெளியாகின்றது. இவ்வாரி யர் இவ்விந்தியநாட்டிற் கால்வைத்த நாள் தொட்டு இத்தேசத்துப் பூர்வ குடிகளாய தமிழ்மக்களுடன் விரோதித்த உள்ளத்தவராயிருந் ததோடு பிற்றையவர் தென்னாடடைந்தகாலத்தும் தம்முற்கொள் கையினின்றும் மாறுபடாத உள்ளத்தவராய் இங்குள்ள தமிழரையும் தம்மடிமைத்தொழிற்கு உரியராகவே கொண்டதுமன்றி, இத்தென் னாட்டுப் புராதன குடிகளாய பழையர் பாணர் வள்ளுவர்துடியர் பறையர் கடம்பர் முதலிய இவர்களை அவ்வாரியர் தம்மைக்காணில் தூர விலகற்குரிய மிகத்தாழ்ந்த வகுப்பினராக எண்ணியதாகவுந் தெரிகின்றது.

ஆரியர் தம்மையுயர்ந்தோராகவும் இத்தேயத்துப் பூர்வகுடிகளை யிழிந்தோராகவுங் கொண்டு அவர்க்கு நான்காஞ்சாதி, ஐந்தாஞ்சாதி வரம்பேற்படுத்தியது ஓர் அதிசயமன்று. ஆயினும், ஆரியர் சிந்துந திப்பிரதேசத்தில் ஆதியிற் புகுந்தபோது நிலம் நீர் அங்கி சூரியன் முதலிய இயற்கைத்தோற்றப் பொருள்களை வணங்கித் தம்மனைவி மக்களைக் காக்கவேண்டி அவற்றைப்பாடி வணங்கிவந்தாரென்பதை

யும், அக்காலத்திலேயே இத்தேசத்தின் பழங்குடியினராய தமிழ்மக்கள் தம் ஒழுக்கத்தினும் ஞானத்தினும் சிறந்துவிளங்கினரென்பதையும் யாம் இனிக்காட்டும் பிரமாணங்கள் நன்குவிளக்கும். ஆரியரது மிகப்பழைய ஆசாரங்கொள்கைகளை அறிதற்கு இருக்குவேதத்தினும் சிறந்த ஆதாரங்கிடையா. இதனைக்கொண்டு அறிஞர் ஆராயுமளவில் ஆரியரது புராதன மனோபாவமும் ஒழுக்கங்களும் அத்துணை முதிர்ச்சியுடையனவல்லவென்பதைத் தெற்றெனவிளக்கும். இருக்குவேதத்தின் பெரும்பான்மையும் நிரம்பிய பொருளெல்லாம் ஆரியர் தமக்குரிய ஆடுமாடுகள்பல்கல் வேண்டியும், தாம் உறையும் நிலம் செழித்தல்வேண்டியும், தம்மக்கள் மனைவியரோடு நன்குவாழ்தல்வேண்டியும், தியூ வருணன் மித்திரன் இந்திரன் முதலியவரைக் குறையிரந்தும் இயற்கைத்தோற்றங்களை யேத்தியும் பாடினபாட்டுக்களும், வேள்விவேட்கும் முறைகள்சிலவுமாம்; இவ்விருக்குவேதம் ஒவ்வொருமுனிவரால் ஒவ்வொன்றாகத் தொகுக்கப்பட்ட பத்துமண்டலங்களையுடையது. அதில் விசுவாமித்திரரால் தொகுத்த மூன்றாவது மண்டலத்தில் ஆரியர்க்குமிகச்சிறந்தமந்திரமாகிய காயத்திரிமந்திரங்காணப்படுகின்றது. இம்மந்திரத்தாற் பெறப்படுகின்றபொருள் அன்பினாற்செய்யப்படும் எம் வேள்விமுறைகளை நடைபெறுவிக்கும் தெய்வத்தன்மையையுடைய சாவித்திரியின் விரும்பத்தக்க ஒளியை யாம் சிந்திக்கின்றேம் என்பதே. இங்ஙனம், ஆரியர்க்குச் சிறந்த மந்திரமாயுள்ள காயத்திரியினும் சூரியனது வழிபாடே கூறப்படுவதென்பர். இனி இருக்குவேதத்தின் பின்னெழுந்த ஆரியமொழி நூல்களினெல்லாம் ஆரியர் தமிழர் என்னும் இருவர்க்குமுரிய இருவேறு ஒழுக்கவகை விரவிக்கிடத்தலால் அவை அவ்விருவரும் ஒருங்குவிரவிய காலவிசேடத்தே யியற்றப்பட்டன என்பதே பொருந்தும். ஆதி ஆரியர் இயற்கைத்தோற்றப்பொருள்களைவணங்கித் தத்துவவுணர்ச்சி சிறிதுமிலராய் ஒருகாலத்திருந்து பின் இந்நாட்டுப் பூர்வமக்களது சம்பந்தத்தால் அவ்வுணர்வு தலைக்கூடப்பெற்றனர் என்பதற்கு ஒரு தக்க ஆதாரமுண்டு. சுவேதகேது என்னும் ஆரியகுரு பாஞ்சாலர்கூடிய பேரவையிற்சென்று ஆங்குச்சைவலி என்னுந்தலைவனோடு வாதியற்றித் தோல்வியடைந்து வருந்திய உள்ளமுடையோனாய், அவ்வுண்மைப்பொருளைப் பெறுதற்கு அவனி

டம் குறையிரப்ப, அவனும் அச்சுவேதகேதுவுக்கு அப்பொருளை விளங்கவுரைத்துப் பின்னும் "நினக்கு முன்னே இவ்வரிய ஞானப் பொருள் பிராமணர் எவர்க்குஞ் சொல்லப்பட்டிலது. இந்தஞான போதனை உலகமெங்கணும் எம்முடைய வகுப்பினர்க்கே உரித்தாயுள்ளது. பிறரதனையறியார்" எனச்சாந்தோக்கிய வுபநிடதத்தில் (ரு, ரு.) கூறப்படுதல் காண்க.

இப்பாஞ்சால வரசன் கூற்றினால் இவன் இப்பரதகண்டத்துப் பூர்வகுடிகளின் தலைவருள் ஒருவனென்பது உய்த்துணரக்கிடந்தது. இஃதன்றியும், தம் தத்துவ நுண்பொருள்களை ஆதியில் வெளியிட்டவர் திரமிடாசாரியர் எனவும், அவரை ஸ்ரீமத் - இராமாநுஜாசாரியரும் நன்குமதித்து அவர் கொள்கையை யெடுத்துப் பாராட்டியிருப்பதாகவும் வைணவர்கள் கொண்டிருக்கின்றார்கள். இதனால், ஆரியர் கலப்பிற்கு முன்னரே தமிழ்மக்கள் தத்துவவுணர்ச்சிகொண்டிருந்தார்கள் என்பது கொள்ளக்கிடந்தது.

(இன்னும் வரும்.)

பொ. பாண்டித்துரை.

---

உ

சிவமயம்.

ஈசுவர சிருஷ்டியில்

# வௌவால்களின் பிரயோசனம்.

அசங்கியமான துர்நாற்றத்தின் பொருட்டும், சந்ததியின்பொருட்டும் பல்லோராலும் பெரிதும் விரும்பப்படாதருவருக்கப்படுகின்ற வௌவால், நம்மிந்தியநாட்டில் இந்துதேவாலயங்களில் இருட்டடர்ந்த கோபுரச்சந்துகளிலும் கோயிலுட்பிரகாரங்களிலுள்ள உயர்வான மனிதரால் சுலபசாத்தியத்தில் எட்டித்தாவமுடியாத பண்டபச்சுவர்களின் மூலைகளிலும் யோகியர்போல் பகன்முழுவதும் தலைகீழாய்த்தூங்கிக் கொண்டிருந்து இராத்திரிவேளைகளில் தம்மிரையின்

பொருட்டு வெளிப்பட்டுலாவும் சுபாவமுடையது. மிருகங்களைப் போற் குட்டிபோட்டுப்பால் கொடுத்துப்போஷிப்பதனாலும், பறவைகள்போல் இறகுகளையுடையனவாய்ப் பறப்பதனாலும் இவ்விரினங்களிற்கும் இடையினமாகவே இச்சாதாரண வௌவாலைச் சேர்த்திருக்கிறார்கள். இத்தகைய வௌவால்கள் மனிதர்களின் வீடுகளிலும் வசித்து வீடுகளை ஆபாசப்படுத்தியும் தொந்தரவு விளைப்பதனால் மனிதர்கள் இப்பிராணிகளை ஒருகால் வெறுப்பார்களாயினும் அன்னவர்களே இவைகளின் உபயோகங்களையறிந்தால் அங்ஙனம் செய்யார்கள் என்பது திண்ணம். இவ்வீட்டு வௌவால்களைத்தவிர்த்து முரட்டுச்சுபாவமுள்ள பெருத்த வௌவால்களும் பல நாட்டிலுள்ள அடர்ந்த தோப்புகளில் மனிதசஞ்சாரமில்லாத விடங்களில் ஏராளமாய் வசிக்கின்றன. இவ்வௌவால்கள் பழந்தின்னிவௌவால்கள் என்றே பெயரிட்டழைக்கப்படுகின்றன. "மரம் பழுத்தால் வௌவாலை வாவென்றுகூவி-யிரந்தழைப்பார் யாவருமிங்கில்லை" என்னும் ஔவையார் வாக்கிற்கிணங்க இவ்வௌவால்களுக்கு எந்த மூலையில் எவ்வளவு விஸ்தாரமான தூரத்தில் பழங்கள் பழுத்தாலும் சொல்லாமலே மோப்பத்தினால் அறிந்துகொள்ளும்படியான சக்தியுள்ளது. தம் கண்களை இறுகமூடிக்கொண்டாலும், அவை தம்காதையும் மூக்கையும் செறித்துப்பிடித்துத் தொலைதூரத்திலுள்ள பழவர்க்கங்களின் வாசனையை மோப்பம்பிடித்து ஆங்கு இரவுகளில் கூட்டங்கூட்டமாய் விரைந்துசென்று மனங்கொண்டமட்டும் அவற்றையுண்டு மீண்டும் தம்மிருப்பிடம் வந்து சேருகின்றன. பழுத்திருக்கப்பட்ட இலுப்பை, ஆல், அரசு, அத்தி, மாதுளை முதலான மரங்களிலுள்ள கனிகளை வயிறுநிறையத்தின்று வழியே பறந்துவரும்போதே அவைவிற்றை வாயினாலேயே கக்கி பலவிடங்களிலும் எச்சமிடுகின்றன. இவ்வாறு எச்சமிட்டபல விடங்களில் பழந்தருமரங்கள் அநந்தம் உண்டாகி அவ்வவ்விடங்களைச்செவ்விய காட்சிதந்து அலங்கரிப்பதுடனில்லாது மனிதர் பல்லோரும் அவைவிற்றினால் அடையும்பலனோ சொல்லிலடங்காது. இப்படி இவ்வௌவால் வர்க்கத்தின் அவ்வெச்சவுரத்தின் சிறப்பு மிகுதியுங்கொண்ட பழமரங்கள், முளைக்கக்கூடாத விடங்களிலும் எதிர்பாராமல் இயல்பாய் முளைத்துப்பலன் தருகின்றன. இவ்வௌ

வால்கள் இங்ஙனம் பழந்தின்று உரத்தின் பெருமைகலந்த எச்சத்தைக்கண்ணுக்கெட்டாத தூரத்திலுள்ள விளைநிலங்களில் உபயோகிப்பதுடன் நில்லாது, பயிர்பச்சைகளில் வந்துமேய்ந்து, அவற்றையடியுடனழிக்கிற பூச்சி, புழுக்களைத் தின்றும்குடியானவர்களுக்குப் பெருத்த உபகாரம் செய்வனவாகின்றன.

வௌவால்கள் பழந்தருமரங்கள் உண்டாவதற்குக் காரணமாவதுபோல் காக்கைகளும், பூமியிலுள்ள அநேகவித அபூர்வவிருக்ஷவகைகளுக்கும் மூலகாரணமாகின்றன. ஜாவாத்தீவில் முதன்முதலில் விளைந்தும், மனுஷரினுபயோகத்திற் கடுத்ததாயுமிருந்த இல்வங்கப்பட்டையின் விதைகளை, அக்காலத்தியடச்சு இராஜாங்கத்தாரின் அநுமதியின்பேரில் சிங்களத்தீவில் அவற்றின் விதைகளைக் கொண்டு விதைத்துத் தகுந்த பந்தோபஸ்துடன் ஆங்குப் பயிரிட்டார்கள். தக்கபந்தோபஸ்துடனே பாதுகாக்கப்பட்ட இவ்விசேஷப்பயிர் எங்ஙனம் பலவிடங்களிலும் பரவிற்றென்று விசாரித்ததில், அபூர்வமான இச்செடிகளின்மீது தம்மாகாரார்த்தமாக உட்காரும் காக்கைகள், அவற்றை ஏராளமாய்த்தின்று கண்டகண்டவிடங்களிலும் தம்மலங்களை அவ்விதைகளுடன் கழித்தலினால், அவ்வுரத்தின் பலங்கொண்ட அவ்விலவங்கப்பட்டைச்செடிகள் ஏராளமாய் எங்குமுண்டாயினவென்று தெரியவந்தது. இம்மாதிரியான விருக்ஷம், செடி, கொடி வகையராக்களை இப்பட்சிக்கூட்டங்களொன்றே எங்குமுண்டாகச்செய்து மனிதசமூகத்திற் குபயோகமாயிருக்கின்றதென்று கருதவேண்டாம். இம்மாதிரியான வேலைகளை மிருகங்களும் நாளாவர்த்தியில் செய்து, குடியானவர்களுக்குப் பெருத்த உபயோகமாயிருப்பதென்பதற்கு, தென்னிந்தியாவில் சிலபாகங்களில் அநுபவ பூர்வமாய் தெரியவருகிறது. தென்னிந்தியாப் பொட்டல் வெளிகளில்(Dry lands)முக்கியமாய்த்திருநெல்வேலியிலும், மதுரையிலும், ஆடுகளும், மாடுகளும் ஏராளமாய் மந்தைமந்தையாய் வளர்க்கப்படுங்காலையில், அவைமேய்க்கப்படுவதற்காக நாடுகள்தோறும், ஓட்டிக்கொண்டு போகும்போது அவை, கருவேலமரத்தின்காய்களை வயிறுநிறைய மேய்ந்து தாம் திரும்பித்தங்குமிடங்களில் சாணியுடன் அக்கருவேல் விதைகளை யிடுவதனால் அநேக கருவேலங்காடுகள் உண்டாகி, அவைகள் குடியானவர்களின் கலப்பைக் கால்களுக்கென்

றும், ஏற்றத்தின் கட்டைகளுக்கென்றும் இன்னும் எத்தனையோ காரியங்களுக் கென்றும் பெரிதும் உபயோகப்படுகின்றன. மேலும் அவை உயர்ந்ததினுசு விறகாக அடுப்பெரிக்கவும் காளவாய்களுக்கும் ஏராளமாய்ப் பிரயோசனப்படுவது எவரும் நன்கறிந்தவிஷயம், ஆலும் வேலும் பல்லுக்குறுதி என்னும் பழமொழியின் வண்ணம், வைத்தியசாஸ்திரரீதியிலும் மிகுதியும் பிரயோசனப்படுகிற இம்மரங்களுக்குக் காரணம் ஆடுமாடுகளேயென்றதனால், மிருகங்களும் எல்லாம் வல்ல ஈசனருளினால் மனிதரின் சௌகரியார்த்தம் வெகு தீர்க்காலோசனையுடன், சிருஷ்டிக்கப்பட்டுளதெனச் சொல்லலும் தக்கதேயாம். தோல் பதனிடுதொழிலுக்கும், ஆடுமாடுகளின் ஆகாரார்த்தமாகவும் பெரிதும் பயன்படுகிற கருவேலமரங்களின் பெருமையும் அருமையும் எழுத எழுத விரியுமாதலின் இப்போது இதைப் பற்றி இம்மட்டோடு நிறுத்தினோம்.

வௌவால்கள் என்னும் பிராணி கடிக்காதபழங்களில்லையாயினும், இவைகள் மனிதருக்குப்பல அரிய பெரிய கைத்தொழில்வேலையில் கைக்குமெய்யாய்ப் பலன்தரக்கூடியதாயிருக்கின்றதென்பதற்குத் திருஷ்டாந்தங்கள் பல உள. தென்னிந்தியாவிலுள்ள இலுப்பைமரங்களில்லாத பலவிடங்களிலும் இவ்வௌவால்களின் உதவியினால், மாந்தர் இலுப்பையெண்ணெய் ஏராளமாய் ஆட்டியெடுத்து இலாபம் சம்பாதிக்கிறார்கள். தஞ்சைஜில்லாவில் பேரளம் காரைக்கால் இருப்புப்பாதையில் பேரளத்திற்குக் கிழக்கே ஒருமைல் தூரத்திலுள்ள புரசக்குடியில் ஓராலமரத்தின்கீழ் வருஷவாரியில் நாலைந்து ஆடத்திற்குக்காணும்படியான இலுப்பைக்கொட்டைகள் தினந்தோறும் பொறுக்கியெடுத்துச்சேர்த்து ஆட்டியெண்ணெயெடுக்கும்படியாய்க் குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்றதென்னப்படுகிறது. தஞ்சை ஜில்லாவில் திருவாவடுதுறை யாதீனத்து இலட்சத்தோப்பிற்கு அருகாமையிலுள்ள ஒரு மூங்கிற்றோப்பில் ஏராளமாகக் குடிகொண்டிருக்கும் பழந்தின்னிவௌவாலின் எச்சத்தைக்கொண்டு வருஷவாரியில் எத்தனையோ கணக்கில்லாத ரூபா வரும்படியுள்ள இலுப்பைக்கொட்டைகள் சேகரிக்கப்பட்டு எண்ணெய் ஆட்டப்படுவதென்றால் இவ் வௌவால்கள் நம் நாட்டில் மனிதரால் நாசமாக்கப்படாது காப்பாற்

றப்படல் வேண்டியதவசியமாகின்றதல்லவா ? இவைபோன்ற இலா பகரமான எத்துணையோகைத்தொழில்களுக்கும் இவ்வௌவால்கள் சாதகமாயிருக்கின்றன. இவ்வௌவால் புழுக்கைகள் கோயில்களி லும் பிறவிடங்களிலு மிருப்பன மிகுதியும் சத்துள்ளதாகையால் இவற்றை ஆங்காங்கு சேகரித்துக் குடியானவர்கள் எருவாயுபயோ கித்துப்பலன் பெறுவதைவிட்டு, அலட்சியம் செய்வது அவ்வளவு நன்றாயிராது. இவைகள் உயர்ந்த புஷ்பச்செடிகளுக்கும், பலன்தரு விருக்ஷங்களுக்கும், மிக்க உரத்தைக்கொடுப்பதாய் ரசாயனமுறை யில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. நாம் அநுபவத்தில் பார்க்கிறோம். இதன் புழுக்கைகளிலேயே இந்துக்களாலும், மகம்மதியர்களாலும், ஆங்கிலேயர்களாலும் முறையே காரஞ்சேர்ந்த துவையல்களாகவும், கிச்சிலிச்சோற்றின் சேர்ப்பாகவும், பெப்பர்மிண்டு (Pepper-mint mixture) மிக்ஸ்ச்சராக ஔஷதசாலையிலுபயோகிக்கப்படுகிறதற்கா கவும் பிரயோசனப்படுகிற பொதினாஇலை (செடி) உண்டாவதாகப் பெரிதும் கூறுகிறார்கள். இவ்வௌவால்கள் அநேகம் அபூர்வமான பழங்களைத்தின்று உஜ்ஜீவித்தல் நிமித்தம், பல பிரபலவைத்தியர் களாலும் இதன்புழுக்கை பல அபூர்வமான மருந்துச்சரக்குகளி லும் சேர்த்துபயோகிப்பதும் பார்த்திருக்கிறோம். பண்டைக்காலந் தொட்டுத் தென்னிந்தியாவின் சில பாகங்களில் இப்பழந்தின்னிவௌ வாலினின்றும் இரத்தம் எடுத்து, இரத்தத்தின் ஒருபாகத்திற்குமேல் நான்குபாகம் நல்லெண்ணெய் கலக்கிப்பக்குவமாய் அவை ஒன்றுசே ரும்படி காய்ச்சி, பலநாள்காறும் இருந்த வழுக்கைத்தலைகளுக்கும் நரைத்ததலைகளுக்கும், சிரங்கு சொறிபிடித்த தலைகளுக்கும் தடவிய தனால், மண்டைக்கொதிப்புகள் பெரிதும் நீங்கி குளிர்ச்சியுண்டாகி, அநேகவழுக்கைத்தலைகளும் எதிர்பாராமல் சடைத்தமயிருடையவைக ளாய் மாறின என்றால், மனுஷசமூகத்தில் இக்கைத்தொழில் எத்து ணைப் பலன்தந்துவந்தது அக்காலத்தில் என்றறியவிடந்தருகின்றது.

நம் சென்னைராஜதானியில் நெடுநாளாகச் செய்யப்பட்டுவந்த இவ்வபூர்வ கைத்தொழில் இப்போது அதனை ஆதரிப்பாரின்மையா லும், வேறுநாட்டிலிருந்து நரை வழுக்கைத்தலைகளுக்கு இந்தியா நாட் டில் இறக்குமதியாகும் அநேகவிதமான நவநவமான எண்ணெய்களா

லும், நமதுதேசத்திய சுவதேசியவௌவால் மயிரெண்ணெயின் கிராக்கி குறைந்து, இக்கைத்தொழிலே இருந்தவிடம் தெரியாது மறைந்தேபோய்விட்டது. இப்பேர்ப்பட்ட ஆதிகாலத்திய கைத்தொழிலினால் நிதர்சனமாய் எவ்வளவோ நன்மையையடைய ஏதுவிருக்கின்றதென்பது இங்கு விஸ்தாரமாய் எடுத்துச்சொல்லவேண்டுவதின்று.

வட இந்தியாநாட்டில் மரத்தினால் எவ்வளவோ அபூர்வமான நவநாகரீகமுள்ள பிம்பங்களும் பிரதிமைகளும், பின்னும் நம்மிந்தியா நாட்டில் அத்தியாச்சரியமான பலவித கைத்தொழில்களும் செய்யப்பட்டுவந்தன. அவையிற்றை ஆதரிப்பாரின்மையால், அந்தோ! அவை உருத்தெரியாமல் மறைந்தேபோயினபோல் இச்சிறந்தவௌவால் எண்ணெய் எடுக்கும் கைத்தொழிலும், ஆதரிப்பாரின்றிக் கைவிடப்பட்டது. நம் நாட்டிற்கு நேரிட்டிருக்கும் பிரதிகூலங்களிலொன்றாகும் என்பதற்கையமேயின்று.

இரசமுள்ள இப்பழந்தின்னிவௌவால்களின் மாமிசமும் அதன் ஔஷதமகிமையின்பொருட்டும் அதன் மாதுரியத்தின்பொருட்டும் மாந்தரால் உட்கொள்ளப்பட்டுவந்தன. அந்நியதேசங்களிலிருந்து இறக்குமதியாகிப் பிரபலமான ஔஷதமாக உபயோகப்படுத்தப்படுகிற காட்லிவர் (Codliver oil and maltine) ஆயில், மால்டீன் முதலிய மருந்துகள் தேகத்திற்குச் செய்யும் சௌகரியத்திற்கு மேலான சௌக்யத்தை யளிக்கக்கூடிய இவ்வௌவால்களின் மாமிசத்தின் அருமை, தற்காலத்தவர் பலருக்கும் நன்குதெரியாமையும், தௌர்ப்பாக்கியமுமேயாம். இப்பேர்ப்பட்ட அருமையான பழந்தின்னி வௌவால் கூட்டமாய்ச்சேர்ந்து, பழத்தோப்புகளைக்கொள்ளைகொண்டாலும் அவற்றின் உபயோகம் மனிதர்க்குப்பெரிதும் உற்றதாயிருக்கிறபடியாலும், பழுத்ததோப்பைக் கடித்துக்காட்டும் தூதனாயிருப்பதனாலும் இவற்றின்மகிமைகளை மாநுடர்போற்றல் தக்கதேயாம்.

இப்பழந்தின்னி அம்சத்தைச்சேராத வேறுவர்க்கங்களுள் வாம்பையர் (Vampire) என்றதோர் இராட்சதாம்ச வௌவால் பல வேளைகளிலும் மிருகங்கள்போன்ற பிராணிகளுடைய இரத்தத்தையும் மனிதர்களுடைய இரத்தத்தையும், அவர்களை முறையே தூங்கும்

போது, தன்னுடைய விசாலமான விசிறிபோன்ற இறகுகளையாட்டியாட்டி நன்றாகத்தூங்குவித்து, அவர்களறியாது அவர் தேகத்திலுள்ள இரத்தத்தை நன்றாக உறிஞ்சி, அவர்களுடைய ஆயுளைக்குறைப்பதாவது பற்றி, அத்தகைய வௌவால்கள் நாடுகளில் பிரபலித்து வளருவதை எவரும் ஒருபோதும் விரும்பமாட்டார்கள் என்பதும் திண்ணம்.

வீ. சுப்பிரமணிய ஐயர்,

தமிழ்ப்பண்டிதர், மாயூரம்.

---

உ

கடவுள் துணை.

# உபாத்தியாயனியல்பு.

(முற்றொடர்ச்சி.)

மாணாக்கர் அடையவேண்டும் நூலறிவிற்குத் தாம் ஓர் முன்மாதிரியாயிருத்தல்போல அவர் பயிலவேண்டும் நற்பழக்கங்களுக்குந்தாம் ஓர் நன்முன்மாதிரி காட்டுதல் உபாத்தியாயர் கடன். உபாத்தியாயரிடத்துக் காணப்படுங் குணங்கள் மாணாக்கரிடத்தும் பிரதிபலிக்குமென முன்னர்க்கூறப்பட்டது. ஆதலின் ஒவ்வொருவரும் பிள்ளைகள் முன்னிலையில் தாம் நடக்கவேண்டியவிதத்தை நன்குகவனித்தல் அத்தியாவசியகம். உபாத்தியாயர் தம் நடவடிக்கைகளில் உண்மையுள்ளவராயிருத்தல் வேண்டும். தமக்குத் தெரியாததைத் தெரிந்ததாக நடித்தல் கூடாது. பாடங்களை முன்னதாக ஆயத்தஞ்செய்துகொள்வதனாற் படிப்பிக்கும்பொழுது சந்தேகமான விஷயங்கள் ஆதல் தெரியாதவிஷயங்களாதல் வராது காத்தல் கூடும். கீழ்த்தரச் சிறுவர்களுக்குத் தம் அறியாமையைக்காட்டுதல் நன்றன்று; அவர் தம் உபாத்தியாயரைக் கல்விக்கடலென மதித்திருப்பவராதலின், மற்றைய மேல்வகுப்புமாணவர்முன் தமக்குத்தெரியாததைத் தெரிந்ததாகக் காட்டலும் வேறொன்றுசொல்லி மறைத்தலுந் தமக்குள்ள மதிப்பைக்குறைப்பனவாம். தெரியாததைத் தெரியாதென்று சொ

ல்லல் ஒருபொழுதும் இழிவாகாது. உண்மைபேசுதல்போல மரியாதையாகப் பேசுதலும் நடத்தலும் உபாத்தியாயர் கவனிக்கவேண்டியன. தமக்குக் கீழ்ப்பட்டவரே என நினைத்துப் பிள்ளைகளுடன் மரியாதையின்றிவசனித்தல் தவிர்க்கற்பாலது. சிலர் ஓயாது "அடேவாடா, போடா" முதலிய கடுஞ்சொற்களைப் பிரயோகித்துக்கொண்டிருப்பர். இவர் பிள்ளைகள் நற்பழக்கமுடையராதல் எங்ஙன்? பிள்ளைகள் எந்தெந்த நற்பழக்கங்களைக் கடைப்பிடிக்கவேண்டியதோ அவ்வப்பழக்கங்களை உபாத்தியாயரும் அணுவளவேனுந் தவறாது அநுசரித்தல் வேண்டும். வாயினாற் சொல்லுதல்மாத்திரம் போதாது. செய்து காட்டுவதே மிகச்சிறந்தது.

உபாத்தியாயரிடத்துப் பழித்தற்குரிய குறைவுகளுங் கெட்ட பழக்கங்களும் இருத்தலாகா. காலையாட்டிக்கொண்டிருத்தலும், மேஜையின்மீது கால்களைத் தூக்கிவைத்துக்கொண்டாதல் மேஜையை உதைத்துக் கொண்டாதல் நாற்காலியிற் சாய்ந்து கொள்ளுதலும், வாங்குமேசை முதலியவற்றிற் படுத்துக்கொள்ளுதலும், பள்ளிக்கூடநேரத்திற் தாம்பூலந் தரித்துக்கொள்ளலும் சுருட்டுப்பிடித்தலுந், தலைப்பாகையை ஆதல் மேற்சட்டை (கோற்) யை ஆதல் கழற்றி மேசையின்மீது வைத்தலும் முதலிய துர்ப்பழக்கங்களை நீக்கல்வேண்டும். உபயோகமற்ற வார்த்தைகளைப் பேசலாகாது.

உபாத்தியாயரிடத்து இருக்கற்பாலவாய சாரீரகுணங்களுள்தேகாரோக்கியம் மிகமேலாயது. உபாத்தியாயருக்குச் சரீரசுகம் இல்லையாயின் அவர்தம் வேலையில் ஊக்கமுடையராதல் கூடாது. கோபமே அதிகப்படும். தேகாரோக்கியத்தோடு கண் காதுகளுங் கூர்மையுடையனவாகப் பெறுதல் வேண்டற்பாலது. உபாத்தியாயரின் கட்புலமுஞ் செவிப்புலமும் நுண்ணியனவல்லாவழிப் பாடசாலையினொழுங்கு கெடுதலுறும். பிள்ளைகள் உரியவேலைசெய்யும்பொழுதுண்டாகுஞ் சத்தத்தையுங், கதைபேசுதல் சிரித்தல்களால் உண்டாகுஞ் சத்தத்தையும் பிரித்தறியும் விவேகமுள்ள செவியும், பாடத்திற் சிரத்தையின்மை பராக்குப்பார்த்தல் முதலியவற்றையுடனே கண்டு குற்றவாளியைச் சென்றுருக்கும் நோக்கும் உடையராதல் சாலவும் நன்று. கண் காதுகள் கூர்மையுடையனவாதலோடு உபாத்தியாய

ரின் தொனியுஞ்சாந்தமாயும் அதிகாரமுடைமையுமாயிருக்கப்பெறல் நல்லாசிரியராதற்கு அனுகூலமாகும். படிப்பிப்பவர் நாடோறும் அதிகநேரம் பேசவேண்டியவராதலின் அவர் தந்தொனியை மிதமாக உபயோகிக்கும் வழியையறிந்து திட்டப்படுத்திக்கொள்ளல் அத்தியாவசியகம். நாட்செல்லச்செல்லப் பேசுங்கருவிகள் பெலங்குறைந்து இளைத்துப்போதல் பிரத்தியட்சம். ஆதலின் சரீராரோக்கியத்தின் பொருட்டு அவசியமின்றி மட்டற்று உரத்துப்பேசுதலைத் தவிர்த்தல்வேண்டும். உபாத்தியாயர் தன்சரீரமுயற்சியை வீண்செலவு செய்யாது குறைந்த முயற்சியால் மிகுந்தபலனை யடையப் பழகல்வேண்டும். பேசும்பொழுது தாழ்ந்தகுரலோடு பேசுதல் உரத்த சத்தத்துடன் பேசுவதனாற் பெறுவதினுங் கூடியபேற்றை அடைவிக்கும். உபாத்தியாயர் பேசுந்தொனி எவ்விதமோ அவர் பள்ளிக்கூடமும் அவ்விதமே. உபாத்தியாயர் கூச்சலிட்டாற் பிள்ளைகளுங் கூச்சலிடுவார்கள். உபாத்தியாயர் கற்பனைகள் பண்ணுங்கால் ஒருபொழுதுந் தன்குரலை உயர்த்தாதிருப்பின் பிள்ளைகள் செவிசாய்த்தல் கட்டாயமாதலோடு அதற்காகத்தங்கள் சத்தத்தைக்குறைத்துத்தங்கள்வேலையை எப்பொழுதும் அமைதியாய்ச் செய்வார்கள். இரைச்சல்மிகுந்த பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளின் பழக்கவழக்கங்களைத் திருத்திச் செவ்வனேநடத்துதல் சிறிதும் இயலாது. அதிக சந்தடியின்றி வேலைநடத்தப்படும் பள்ளிக்கூடம் உபாத்தியாயர் தேகாரோக்கியமுடையராதற்கும் பிள்ளைகள் சற்குணமுடையராதற்கும் ஏற்ற இடமாம். உபாத்தியாயர் சொல்வது வகுப்பிலுள்ள பிள்ளைகளெல்லோர்க்குங் கேட்கும்படி தெளிவாயிருத்தல் வேண்டும். வகுப்பிலுள்ள சிலர்க்குக் கேளாமலிருக்கும்படியான தீனசுரத்துடன் பேசுதல் வகுப்பில் ஒழுங்கின்மைக்கு ஏதுவாம்.

இதுகாறுங் கூறிப்போந்த இலக்கணங்கள் எல்லாம் ஒருவரிடத்தமைதல் அரிது. ஆயினும் அவற்றுள் இயற்கையாகத் தம்மிடத்துள்ளனவோடு இல்லாத குணங்களையும் பயின்று அப்பியசிக்கப் பிரயத்தினப்படல் உபாத்தியாயத்தொழில் பூணுவர்க்குரிய கடன். நிற்க, உபாத்தியாயனுவான் முடிவற்றபொறுமையுந் தவறுதநீதியுங் கலங்காத நற்குணமுமுடையவனும், நாகரிகம் சாமர்த்தியம் இவை

கட்கிருப்பிடமாயும், படிப்பிக்கும் ஒவ்வொரு விஷயத்திலும் பூரண அறிவுடையனுமாயிருத்தல் மிகவேண்டற்பாலதென்னினும், இவ்விலக்கணங்களெல்லாம் அமையப்பெற்றவர் மிக அரியர். உபாத்தியாயத் தொழிலைச் சனங்கள் எங்ஙனம் மதிக்கின்றார்கள்? இத்தொழிலாளர்க்குக் கொடுக்கப்படும் வேதனம் எவ்வளவு? நாகரிகமடைந்த தேசங்களொவ்வொன்றிலும் வேண்டியிருக்கும் உபாத்தியாயர் எப்பெருந்தொகையினர்? என்பனமுதலியவற்றைச்சிந்தித்தல்வேண்டும். சிந்திக்கின் உபாத்தியாயரெல்லாரும் மற்றைய தொழிலாளர்களைக் காட்டிலுங் கூடிய உணர்ச்சித்திறம் உடையராதல் வேண்டும் என்றெண்ணுதல் பொருந்தாமை தெளியப்படும். உபாத்தியாயர் தகுந்த கல்வியறிவுஞ் சிறந்த போதனைப்பியாசமும் உடையனாதல் இன்றியமையாதன. சரீர ஆரோக்கியமும் மிதமான மனோசத்தியும் இழிகுணங்களின்மையும் வேண்டற்பாலன. இவற்றினும் விசேஷகுணங்கள் ஒவ்வொருவரிடத்திலும் இருத்தல் அசாத்தியம். தம்மிடத்தில்லாத நற்குணங்களைச்சிறிது சிறிதாக அப்பியசித்துவரின் ஈற்றில் அக்குணங்களை அவர் முற்றும் பொருந்தப்பெறல் நிச்சயம்.

இன்னுங் கற்கப்படுவோரை,

“ வலம்புரிமுத்திற் குலம்புரிபிறப்பும்
வான்யர்றன்ன தூய்மையும் வான்யாறு
நிலம்படர்ந்தன்ன நலம்படொழுக்கமுந்
திங்களன்னகல்வியுந் திங்களொடு
ஞாயிறன்னவாய்மையும் யாவதும்
அஃகாவன்பும் வெஃகாவுள்ளமுந்
துலைநாவன்ன சமநிலை யுளப்பட
வெண்வகையுறப்பின ராகித்திண்ணிதின்
வேளாண்வாழ்க்கையுந் தாஅளாண்மையு
முலகியலறிதலு நிலைஇயதோற்றமும்
பொறையுநிறையும் பொச்சாப்பின்மையும்
அறிவுமுருவு மாற்றலும் புகழுஞ்
சொற்பொருளுணர்த்துஞ் சொல்வன்மையுங்
கற்போர்நெஞ்சங் காமுறப்படுத்தலும்
இன்னோரன்ன தொன்னெறிமரபினர்
பன்னருஞ்சிறப்பி னல்லாசிரியர்.”

என்பதனாற்காண்க.

தி. சதாசிவ ஐயர்.

---

திருச்சிற்றம்பலம்.

# திருக்குறளாராய்ச்சி.

யான் தமிழ்ச்சங்கம் சேதுபதி செந்தமிழ்க் கலாசாலையில் பண்டித பரீக்ஷைக்காகப் படித்தகாலத்தில் மாட்சிமைபொருந்திய, அக்கலாசாலையின் தலைமை உபாத்தியாயரவர்கள் முகமாக, சேனாவரையத்தைப்போலவே திருக்குறளையும் ஏடுவைத்துப்பாடங்கேட்டேன். அதிற் சில திருத்தங்களும் பாடபேதங்களும் கிடைத்தன. அவற்றுள்ளே திருத்தங்களை மட்டும் முதலில் வெளியிடுகின்றேன்.

கா௦அ. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

இதன் விசேட வுரையில், "இரண்டு மொருவனாற் செய்யப்பட்டவழி மறப்பதும் மறவாததும் வகுத்துக் கூறியவாறு" என்ற வாக்கியம் சில ஏடுகளில், "இதனான் இரண்டுமொருவனாற் செய்யப்பட்ட வழி மறப்பதும் மறவாததும் வகுத்துக் கூறப்பட்டன." என்றுகாணப்படுகிறது. இவ்வுரையாசிரியர் அறத்துப்பால் பொருட்பாலென்னு மிரண்டினுமுள்ள குறள்கட்கெல்லாம், சிலவற்றிற்குத் தனியாக இதனாலின்னது கூறப்பட்டது என்றும், சிலவற்றிற்கு இரண்டு முதலியனவாகச் சேர்த்து இவையிரண்டு பாட்டானு மின்னது கூறப்பட்டது; இவை மூன்றுபாட்டானு மின்னது கூறப்பட்டது என்றும் விடாது கருத்துக் கூறியிருப்பதனாலும், ஈண்டு, கா௦எ-ம் குறள் இறுதியில் (கா௦சு, கா௦எ) இவையிரண்டு பாட்டானும் நன்றி செய்தாரது நட்பு விடலாகாதென்பது கூறப்பட்டது." என்றும், கா௦கூ-வதனிறுதியில் "இதனான் நன்றல்லதன்றே மறக்குந்திறங் கூறப்பட்டது," என்றும், காணப்படுதலானும், கா௦அ-ம் குறளீற்றினும், "இதனான் இரண்டு மொருவனாற் செய்யப்பட்டவழி மறப்பதும் மறவாததும் வகுத்துக்கூறப்பட்டன" என்றிருப்பது பொருத்தமுடைத்து.

கஉ௩. செறிவறிந்து சீர்மை பயக்கு மறிவறிந்
தாற்றி னடங்கப் பெறின்.

என்பதன் விசேடவுரையாரம்பத்தில் "அறிதலிரண்டனுள் முன்னது செயப்பாட்டுவினை" என்னும் வாக்கியம் சில ஏடுகளிற் காணப்படுகின்றது. இவ்வுரையாசிரியர் ஒருசொல் இருபொருளில் வரும் (குறள் ௧௧௬ முதலியன) பிற இடங்களில் இவ்வாறு விளக்கிப் போதலின் ஈண்டு மிவ்வாக்கிய மிருத்தல் பொருத்தமுடைத்தாம்.

௧௪௧. பிறன் பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
தறம்பொருள் கண்டார்க ணில்.

என்பதனுரையில், "ஞாலத் தறம்பொருள் கண்டார்கணில்" என்பதற்கு, "ஞாலத்தின்கண் அறநூலையும் பொருணூலையும் ஆராய்ந் தறிந்தார்மாட் டில்லை." என்றச்சிடப்பட்டிருக்கிறது. இதற்குச் சில ஏடுகளில் "ஞாலத்தின்கண் அறநூலும் பொருணூலு மாகிய இரண்டையு மாராய்ந் தறிந்தார் மாட்டில்லை" என்பது பிரதிபேதமாகக் காணப்படுகிறது. ஆசிரியர், "செவ்வெண்ணின் றொகை தொக்குநின்றது" எனப் பின்னெழுதியுள்ள விசேடவுரைக்கேற்ப "அறநூலும் பொருணூலுமாகிய இரண்டையும்" என விரித்தெழுதுதல் வேண்டுமாதலின் இதுவே சிறப்புடைத்தென்க. இதற்கு இவ்வாறு தொக்கு நின்றதாக இலக்கணமெழுதும் (குறள் ௧௪,௫௧, ௧௧௨, ௧௨௭, ௧௩௨, ௧௪௫, ௫௫௧, முதலியன.) இடங்களிலெல்லாம் தொக்கு நின்றவற்றை யுரையில் விரித்தெழுதுதல் சான்றாம்.

௧௬௮. அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்.

இதன் விசேட வுரையில் "பண்பிற்குப் பண்பியில்லை யேனும் தன்னை யாக்கினானை யிருமையுங் கெடுத்தற் கொடுமைபற்றி அழுக்காற்றினைப் பாவியென்றார், கொடியானைப் பாவியென்னும் வழக்குண்மையின்," என்னும் வாக்கியத்தில், "பண்பிற்குப் பண்பியில்லையேனும்" என்பது "பண்பிற்குப் பண்பில்லை யேனும்," என்று சில ஏடுகளிற் காணப்படுகிறது. இக்குறளில் அழுக்காறென்னும் உடல்கொளுயிர்க்குணத்தைப் பாவமென்னும் மற்றொரு குணமுடையது போலப் பாவியென்றது, 'பண்பிற்குப் பண்புகோடல் பொருந்தாது' என்னும் தருக்கநூற் கருத்துடன் மாறுபட்டு வழுவாதல் நோக்கி, அதனை அமைப்பான் "தன்னை யாக்கினானை இருமையுங் கெடுத்தற்

கொடுமைபற்றி அழுக்காற்றினைப் பாவியென்றார். கொடியானைப் பாவியென்னும் வழக்குண்மையின்" என்று ஆசிரியர் கூறுதலின், இதற்கேற்ப, "பண்பிற்குப் பண்பில்லையேனும்,"என்பதே பொருத்த முடைத்தாம். இவ்வாறே ஆசிரியர் சேனாவரையரும் (தொல்-சொல் உகச) "அன்மையி னின்மையின்" என்னுஞ் சூத்திரவுரையில் "அன் மையு முண்மையும் பண்பிற்கு மொத்தலிற் பண்பெனப்படா; என்னை? குணத்திற்குக் குணமின்மையின்." எனக் கூறியதூஉங் காண்க. குணத்திற்குக் குணமின்மையாவது - ஒரு குணத்தின்கண் மற்றொரு குணமின்மை.

௧௯௫. சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின்.

இதன் உரையில் "பயனில நீர்மையுடையார் சொலின்," என்ப தற்கு, "பயனிலவாகிய சொற்களை இனிய நீர்மையுடையார் சொல் லுவராயின்" என்றச்சிடப்பட்டிருக்கிறது. சில ஏடுகளில், "பய னிலவாகிய சொற்களை இனிமையுடையார் சொல்லுவராயின்" என் றிருக்கிறது. இனிமை நீரின் குணமாகலானும், இதனை "நீர்மை-நீரின்றன்மை"என ஆசிரியர் விசேடவுரையில் விளக்குதலானும் இனி மையுடையார் சொல்லுவராயின்" என்பதே சிறப்புடைத்தாம். எ௮உ-ம் குறள் விசேடவுரையில 'நீரவரென்றார், இனிமைபற்றி' என ஆசிரியர் கூறியதூஉங் காண்க.

உ௧௧. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

இதனுரையில் "சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு," என்பதற்கு, "துறவானமைந்தார்க்கு விளக்காவது மனத்திருள் கடி யும் பொய்யாமையாகிய விளக்கே விளக்காவது," என்றச்சிடப்பட் டிருக்கிறது. சில ஏடுகளில் "துறவா னமைந்தார்க்கு விளக்காவது மனத்திருள் கடியும் பொய்யாமையாகிய விளக்கே" என்ற பாடங் காணப்படுகிறது. "சான்றோர்க்கு விளக்கு பொய்யா விளக்கே" என அந்வயப்படுத்திப் பொருள்கொள்ளின், "துறவா னமைந்தார்க் கு விளக்காவது மனத்திருள் கடியும் பொய்யாமையாகிய விளக்கே"

என்பது பொருத்தமா யிருத்தலானும், அச்சுப்பிரதிப் பாடத்தில் ஈற்றிலுள்ள 'விளக்காவது' என்னுஞ்சொல் மிகையாதலோடு வாக்கியத்தின் அழகையுங் கெடுத்தலானும் ஏட்டுப்பாடமே கொள்ளற்பாலதாம். இதற்கேற்ப,

இக்குறள் விசேட வுரையீற்றிலுள்ள "இனியிதற்கு.......... உரைப்பாருமுளர்" என்னும் வாக்கியத்தினும் அமைந்தார்க்கு விளக்கமாவது, பொய்யாமையான் வரும் விளக்கமே விளக்கமென்றுரைப்பாருமுளர்" என்றவிடத்து, "அமைந்தார்க்கு விளக்கமாவது பொய்யாமையான் வரும் விளக்கமே என்றுரைப்பாருமுளர்" என்ற பாடங் காணப்படுகிறது.

ந௦ச. ஈகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையு முளவோ பிற.

இதன் விசேடவுரையிலே 'துறவாற் புறப்பகையில ராயினும்' என்பதிலுள்ள 'துறவால்' என்பது ஏடுகளில் 'துறவியால்' என்றே காணப்படுகிறது. திருக்கோவையார் "அளவியை யார்க்கும் அறிவரியோன்" என்னும் ௪0-வது செய்யுளின் விசேடவுரையில் 'துறவு துறவியென நின்றாற்போல அளவு அளவியென நின்றது என்னும் வாக்கியம் காணப்படுதலின் 'துறவியாற் புறப்பகை யிலராயினும்' என்றிருத்தல் கூடுமென்பது.

ந௨எ. தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை.

இதன் விசேடவுரையில் "இனித் தன்னுயிர் நீப்பினும் என்பதற்குச் சாந்தியாகச் செய்யாதவழித் தன்னுயிர் போமாயினு மென்றுரைப்பாருமுளர்; பிறர் செய்தலு மாகாமையின், அஃதுரையன்மை யறிக." என்னும் வாக்கியத்தில் 'பிறர் செய்தலும்' என்பது 'பிற செய்தலு' மென்று ஏடுகளிற் காணப்படுகிறது. சாந்தியாகச் செய்தலாவது:—தன் அரிஷ்ட நிவிர்த்திக்காகக் கணி, கோடாங்கி முதலியோர் கூற்றின் வண்ணம் பிறரைக்கொண்டேனுந் தானாகவேனும் ஆடு முதலியவற்றைக் கொன்று பலிகொடுத்தல். இது செய்யாதவழித்தன்னுயிர் போமாயினும் தான்பிறிதோ ரின்னுயிரை யதனுடம்

*

பிணிக்குந் தொழிலைச் செய்பவற்க. என்பது ஒரு சாராருரையென்று கூறி, அஃதுரையன்மைக்குக் காரணங் கூறுகின்றவர் 'பிறர்செய்தலு மாகாமையின்' என்னின் அவ்வுரையிற் பிறர் செய்தல் ஆகும் என்பது போதராமையான் முன் பின் மலைவுடைத்தாம்; 'பிறசெய்தலு மகாமையின்' என்னின் 'சாந்தியாகச் செய்வதல்லாத பிற கொலை செய்தலும் ஆகாமையின்' என்றுபொருள்பட்டுப் பொருத்த முடைத்தாம். பிறகொலை செய்தல் - தன்னைக்கொல்ல வந்த வுயிரைக் கொல்லுதன் முதலியன. ஆகவே 'பிறசெய்தலு மாகாமையின்' என்பதே கொள்ளத்தக்கதாம்.

௩௬௭. அவாவினை யாற்ற வறுப்பிற் றவாவினை
தான்வேண்டு மாற்றான் வரும்.

இதன் உரையில் 'அவாவினை யாற்ற வறுப்பின்' என்பதற்கு 'ஒருவன் அவாவினை வஞ்சித்துவரக் கெடுக்கவல்லனாயின்' என்று அச்சுப் பிரதிகளிற் காணப்படுகிறது. ஏடுகளில், 'ஒருவன் அவாவினை வஞ்சித்தும் வாராமற் கெடுக்க வல்லனாயின்' என்றே காணப்படுகிறது. மேலே ௩௬௬-ம் குறளில் 'ஒருவனை வஞ்சிப்பதோரு மவா' (மெய்யுணர்தலின்றி; காரணங்களெல்லா மெய்தி அவற்றான் வீடெய்தற்பாலனாய ஒருவனை மறவிவழியாற் புகுந்து பின்னும் பிறப்பின்கண்ணே வீழ்த்துக் கெடுக்கவல்லது அவா) என்று அவாவின் வலிமை கூறினவர் - இக்குறளில் 'அவாவினையாற்ற வறுப்பின்' என்றதனால், (அவ்வாறு வஞ்சித்து வரத்தக்க வலிமையுடைய) 'அவாவினை வஞ்சித்தும்வாராமற் கெடுக்க வல்லனாயின்' என்னும் ஏட்டுப் பாடமே மிக்க சிறப்புடைத்தாம். ஆற்றவறுத்தல்-முற்றவறுத்தல்= வஞ்சித்தும் வாராமற் கெடுத்தல்.

௭௮௦. புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பிற் சாக்கா
டிரந்துகோட் டக்க துடைத்து.

என்னுங் குறளில் 'சாகற்பின்' என்பது 'சாகிற்பின்' என ஏடுகளிற் காணப்படுகின்றது. உரையாசிரியர், சாவப்பெறின் என ஆற்றலுணர்த்தும் இடைநிலைப் பொருடோன்ற உரை கூறியிருத்தலானும்; சாகற்பின் என்பதே பாடமாயின் இதற்கு விசேட வுரையில்

இலக்கணக் குறிப்புக் கூறியிருத்தல் வேண்டும், அங்ஙனங் கூறாமை யானும்; இதுபோலவே "ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங்காண்கிற் பிற் - றீதுண்டோ மன்னு முயிர்க்கு" (குறள் - ககூ0) என்னுங்குற ளில், "காண்கிற்பின்" என்பதற்கு காணவல்லனாயின் என அப்பொரு டோன்ற உரையுரைத்து 'நடுவுநின்று ஒப்புக்காண்டலருமைநோக்கிக் காண்கிற்பின் என்றார்' என்று விசேடங்கூறியிருத்தலானும், "சாகிற் பின்" என்னும் ஏட்டுப்பாடமே பொருத்தமுடைத்தாம்.

அ. கோபாலையர்.

---

## *ஆசாபாசங்களும் அவைகளையொறுத்துத்தற்கடிதலும்.

(முற்றொடர்ச்சி)

அடிமைகள் குதிரைகளின்மேலேறிப் போவதையும் வம்மிசபதி கள் அடிமைகளைப்போற் கால்சாரியாய் நடந்துசெல்வதையும் கண் டேனென்று சலோமோன் (Solomon) சொல்லிக்காட்டிய முறை பிறழ்வு இதுதான். ஒருமிருகம் மனிதனைப்பிடித்து இறுக்கக்கட்டித் தன் மனம்போல எங்கும் இழுத்துக்கொண்டுபோவது சுபாவத்துக்க டாத காரியமன்றோ? இதைக்கண்ணுற்றோரெவரும் ஆச்சரியப் படாதொழிவரோ? என்றாலும் மிருகத்துக்குரிய தங்கள் ஆசாபா சங்களால் இழுபட்டு அவைகளுக்கு அடிமையாயிருக்கிறவர்கள் எந் நிலையிலும் அநேகருண்டு. அவர்கள் பெரும்பான்மையோராதலால் அவர்கள்செய்கிற இந்த இழிதகைமையையும்சிஷித்தத்தையுங்கண்டு எவரும் ஆச்சரியப்படுவதைக் காண்கிலோம். இவ்வாறு ஆச்சரியப் படாமலிருப்பதும் பிரலாபத்துக்குரிய பெரியதீமையே. டியோ ஷேனென்னும் சாஸ்திரி ஒருநாள் பட்டப்பகலில் விளக்கைக்கொளு த்திக் கையிற்பிடித்துக்கொண்டு எதையோ தேடுகிறவனைப்போல அத்தேன்பட்டணத்துத் தெருவழியே போய்க்கொண்டிருந்தான்.

---

* இவ்வியாசம் மதுரைத் தமிழ்ச் சங்கத்து எட்டாம்வருஷோற்சவ தினங்களுளொன்றாகிய 1909-ஆம் மேமீ 25உ கூடிய வித்துவச்சபையில் கீழக்கரை, ஸ்ரீமத்-M. ஜோஸப்டையாஸ் அவர்களாற் படிக்கப்பட்டது.

அவனை இங்கிலேயிற்கண்ட ஒருவன் என்னதேடுகிறு யென்றுகேட்ப, மனிதனைத்தேடுகிறேனென்று மறுமொழிசொன்னான். அதற்குமற்றவன் தெருநிறைய மனிதர்கள் நடந்து செல்லுகின்றார்களே அவர்களைக் காணவில்லையாவென்றான். அப்பொழுது தியோசேன் நீ சொல்வது சரியல்ல, இவர்கள்மனிதரல்லர் மிருகங்கள். ஏனெனில் மிருகத்துக்குரிய தங்களாசாபாசங்களை இவர்கள் பின்சென்று நடப்பதால் மனிதரைப்போல நடக்கிறதில்லை. . மிருகங்களைப்போலநடக்கிறார்கள்'' என்றான். சரீரம் தன்னை ஆட்கொள்ளவிடுகிறவன் தலை கீழாகவும் கால்மேலாகவும் நடக்கும் கழைக்கூத்தனைப்போல் கடவுளுடையவும் தேவதூதர்களுடையவும் பார்வைக்குக் காணப்படுவானென்றும் அந்த அகுஸ்தீன் என்பவரே சொல்லியிருக்கிறார்.

இதைவிட இகழ்ச்சியும் மதியீனமும் வேறுண்டோ? புத்தியைச்சரீரத்துக்குக் கீழ்ப்படுத்தித் தினந்தோறும் இவ்வித அயோக்கிய நடத்தை நடக்கிறவர்கள் அனேகருண்டு. இவர்கள் இதைப்பற்றி வெட்கப்படுவதுமில்லை. இப்படி வெட்கப்படாதவனுக்குப் புத்தி முழுதும் அற்றுப்போயிற்றென்று கருதற்பாலது. "என் சரீரத்துக்கு அடிமைப்படுகிறதற்காகவல்ல மேலான மகிமைக்காக நான் பிறந்திருக்கிறேன்'' என்று செனேக்கர் என்னுஞ்சாஸ்திரிசொன்னதால் அவன் தன்னைப்பற்றிச் சரியான எண்ணமுற்றிருந்தானென்று அறியக்கிடக்கின்றது. இவ்வாக்கியம் நம்மெல்லாருடைய இருதயங்களிலும் பதிந்திருத்தல் சால்புடைத்து. மனிதனொருவன் மிருகமாக மாறித்தான் இவ்வாறு மாறிப்போனதாக அறிந்துகொள்ளாமலும் இதற்காகத் துக்கப்படாமலுமிருந்தால் இதைப்பார்க்கிறநாம் எவ்வாறு பெருவியப்படைவோம்! இதைப்பார்க்கமேற்கூறியவெட்கமில்லாதவன்மேல், அதிக ஆச்சரியப்படவேண்டுமென்று அந்த அகுஸ்தீனென்பவரே சொல்லுகிறார். மேற்கூறியாங்கு நீசமிருகத்தைப்போற் சரீரந்தன்னை யாளாது ஆத்மாவே சரீரத்தையாட்கொண்டு நடத்தி ஐம்புலனடக்கிக்கொன்று பாவத்தைப்பயக்கும் வரையும் பற்றற வெறுத்தொழித்தமையான் மாசற்றமனத்தூய்மையாற் பொங்கின தேவசிநேகத்துயர்ந்து தெளிந்த ஞானமுடையோரொழிய ஏனையோர் முத்தியின்பத்துக்குரியரல்லரென்றும் அம்முத்திவழி காட்டவே, அருவனுனகடவுள் அழகியவானுலகத்தினின்றி

றங்கி உருவனாய் இவ்வுலகில் மனிதாவதாரம் பண்ணினரென்றும் இதனடியிற்காட்டிய தேம்பாவணிச் செய்யுட்கள் வலியுறுத்துகின்றன. அவை வருமாறு:—

"மெய்வினை யிடமைந் தின்றி விளங்கிய கடவு ளாகிப்
பொய்வினை பொறிக ளட்டுப் புரைவினை நசையு மட்டுத்
தூய்வினை யுளத்திற் பொங்குந் தடர்பிற காக வூக்கி
யைவினை யுணர்வோ ரல்லா லனந்தனற் பாதஞ் சேரார்."

உரை.—சத்த பரிச ரூப ரச கந்த மென்றைந்தினையும் பொருந்தினவுடலில்லாது கடவுளரூபியாதலாற் பொய்யைக்காட்டின் செவிமுதற் பஞ்சேந்திரியங்களை யடக்கிக்கொன்று பாவத்தைப்பயக்குமாசையும் வெறுத்தொழித்தமையாலழுக்கறத் தூயமனதிலே பொங்கினதேவநட்பினையிறகாகக் கொண்டு தந்நிலையின் மேலுயர்ந்து தெளிந்த ஞானமுடையோரொழியக் கடவுள்பாதத்தை யொருவருஞ் சேரார்.

"செருவழி பொறிக ளைந்துஞ் செகுத்துத்தன் னிலையி னூக்க
லருவழி யென்று தானே யங்கண்வா னிறங்கிப் பாரிற்
கருவழி வந்தநாதன் கலைமுதிர் சுருதிகாட்ட
வுருவழி தோன்றி மாக்க ளூறவுற மகனு னனே."

உரை.—போராடி யைம்பொறிகளையும் வென்றடக்கித்தன்னிலையின் மேலுயர்ந்து கடவுள் பாதத்தை யடைதற்கரிய வழியிதென்று கடவுள்தானே யழகிய வானுலகத்தினின்றிறங்கிப் பூவுலகிற் கருப்பத்தின் வழியாக வவதரித்துக் கல்விமுதிர்ந்த வேதத்தை மனிதர்க்குக் காட்டவரூபியானவ னுருவோடுதோன்றி மனிதருறவினைத் தேடித்தானே மனிதனானன்.

"காரொழுங் ககனத் தூர்ந்த கதிர்பல வுதித்தல் தந்தே
யேரொழு மணியும் பூவு மினியதீங் கனியு மற்றச்
சீரொழும் பொறித்த மாமை திளைத்தன வெவையுந் தந்த
பேரொழுங் கருணை யானே பின்னையுந் தன்னைத் தந்தான்."

உரை.—மேகங்கள் திரியுந்திசையின் மேலெழுந்த வானத்திலூர்ந்த சந்திர சூரிய நட்சத்திரங்களுதித்து விளங்கத்தந்து வடிவழகுள்ள மணிகளையு மலர்களையு மினியகனிகளையு மெழுதப்பட்ட வழகினுற்

சிறந்த மற்றெல்லாவற்றையு நமக்குத்தந்ததின்பின் னிக்காலத்திற் பெருங்கருணையுடைய நாதனவதரித்துத் தன்னையுந்தந்தான்.

"நூனெறி வழங்கா வண்ண நுதலிய கருணைச் சால்பிற்
சூனெறி நரதே வாகித் தோன்றிய பின்ன ரெந்தை
பானெறி பெருகு மின்பப் பரவைநா மூழ்கல் தந்து
வானெறி வழங்குந் தன்மை மண்ணிடை வழங்கான் கொல்லோ."

உரை.—கற்றோர் நினையாத முறையை நினைத்தகருணையின் மிகுதியாலெங்கத்தாவே யவதரித்த நரதேவனாய் வந்தபின்பு பாலினாற் பெருகின வின்பக்கடலினுமினிதாய்மூழ்க வானத்தில் வழங்கினதன்மை பூவுலகினும் வழங்கச்செய்யானோ?

"கோலநற் படலை பைம்பூக் கூருகிர் விசித்த மாலை
சாலநற் கதிர்ப்பொன் பற்றுந் தடமணிப் படலை மற்ற
நீலநற் கடல்சூழ் பாரி னிகரற வலிய வார்த்தி
ஞாலநற் றகவி லோங்க நாயகன் மனித னானன்."

உரை.—வடிவுள கோவையாக விறகக்கட்டின பூமாலையும், விளங்கின பொன்னாற்கட்டின பெருமணி வடமுங்கருங்கடல்சூழ்ந்தபூவுலகிலுள்ள மற்றதெல்லாமு நிகராம விருதுவத்தை வலியாக வொன்றாய்க்கட்டி மண்ணுலகு பெருமையடைந்தோங்கக் கத்தா தானே மனிதனானன்.

"பூட்டிய புணர்ச்சிப் பாலாற் புணரிரு துவங்கள் வேறாய்க்
கூட்டிய லொருவ னாய குணத்தவன் மனுவு மென்பா
னீட்டிய நலங்கள் குன்றா விறைவனு மென்பா னிவ்வாய்
சூட்டிய கருணை நன்னூற் றுறைவலோ ரடையும் பாலோ."

உரை.—தெய்வத்துவமு மனுத்துவமு மென்றிரண்டையு மொன்றாய்க் கூட்டின புணர்ச்சி முறையினாலவ்விரு துவங்களிரண்டாய் நிற்பக்கூடின விரு பேராகாமலொருவனேயாகி யதனாலவன்றானே மனிதனென்றுந் தேவநற்குணங்கள் குறையாத தேவனென்றுஞ் சொல்லப்படுவா னித்தன்மையாலாண்டவன் காட்டின கிருபையை நிறைந்த கல்வியினல்லோருமடைந்து விரித்துக்காட்டத் தக்கவரோ?

"நஞ்சமிர் திரண்டுஞ் சேர்த்து நஞ்சுநல் லமிர்த மாமோ
விஞ்சவிர் பொன்னிற் சீருள் விசித்திது பசும்பொன் னாமோ

நெஞ்சவிர் கருணை பூண்ட நிமலன்றன் குணமுங் குன்று
வெஞ்சழி மனுவின் றன்மை யிறைமையோ டுயர்த்தி னனே.'

உரை:—நஞ்சுமமிர்தமு மென்றிரண்டையுங் கலந்தா லமிர்தத்தின்குணம் குன்றுமேயொழிய நஞ்சுதானமிர்தமாகாதே. விளங்கின பொன்னோடு செம்பினைக் கலந்தாற் பொன்மாற்று, குறையுமேயொழியச் செம்பு தங்கமாகாதே. ஒளியணியாகக் கருணையைப் பூண்ட கடவுளோவென்றுற் றெய்வத்துமு மனுத்துவமுமென்றிரண்டையுங் கூட்டிச் சேர்த்த தன்மையினுற் றேவத்துவமுங் குறைபடாமல் நீசமனுத்துவத்தைத் தூக்கித் தெய்வத்தொத்ததாக வுயர்த்தினன்.

இவ்வாறுய் நீசமனுத்துவத்தைத் தெய்வத்தொத்ததாக வுயர்த்தித் தமதுபிறப்பு முதல் இறப்புவரை தரித்திரதுன்பதுரிதத்தையே யநுபவித்து அத்துன்பத்தின் அறிகுறியாகிய சிலுவையைச் சுமந்து எம்மைப்புரந்து மரித்த மூன்று நாள் ஒட்டோலகராயுடலுயிரோடுயிர்த்து நாற்பானுள் பரத்துக் கெழுந்தருளிய ஏசுக்கிறீஸ்து இரக்ஷகர் தம்மைப் பின்செல்லும் பின்னடியார்க்கு வற்புறுத்தியுரைத்த வாக்கியமு மிவ்வொறுத்தலை யவர்கள் கைக்கொண்டொழுகி வளர்க்கவேண்டுமென்பதே. அவர் தமது சிஷ்யருக்குரைத்த வசனமாவது:—

"யாதொருவன் என்னைப்பின்செல்ல விரும்புவனேல், தன்னைத்தானே பரித்தியாகஞ்செய்து தன் (துன்பமாகிய) சிலுவையை அநுதினமுஞ் சுமந்துகொண்டு என்னைப் பின்செல்லக்கடவன்."

(மத்தேயு XVI—24.

இவ்வாக்கியத்தின்மேல் அர்ச். எரோனிமுஸ் (St. Eronimous) எடுத்து மொழிவதாவது:—

முன்னர்க் களி, மடி, மானி, காமி, கள்வனுதிகுற்றமுள்ளோன் தன் முந்திய நடக்கையை முற்றுந்திருத்திப் புனிதனுவதும், அடக்கவொடுக்கமில்லா தலைந்து, அலக்கணுற்றவன் அறத்தினை முயன்று மறத்தினை யொழித்து அருளாளியாவதும் அறவழியிற் பலவீனனும் அருங்கோழையுமானவன் அவ்வறநெறி நிற்ப ஆர்ந்த தாஷ்டீக

பலமும் அருந்துணிவுமுடையவனாய்த் தன்னைத்தானே பரித்தியாகம் பண்ணித் தன் துன்பமாகிய சிலுவையைப் பொறுமையோடு சுமந்து போகிறானென்பதற்குப் போதிய வடையாளமாகுமென்றார்.

ஆதலின் யாமும் எமதநுதின துன்பமாகிய சிலுவையை ஆவலாய்ப் பொறுமையோடு சுமந்து ஐம்புலனடக்கி ஆசாபாசங்களை யொறுத்து நம்மை நாமே கடிந்து சுயபரித்தியாகம் பண்ணி அறத்தினைமுயன்று மறத்தினையகன்று அறவாழியந்தணன் அடிப்புணை சேரப் பிறவாழி நீந்திப் பீடுற முயல்வோம்.

"வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப்படும்"

"தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார் மற்றல்லா
ரவஞ்செய்வா ராசையுட் பட்டு." (திருக்குறள்)

முற்றிற்று.

---

உ

சிவமயம்.

# இராமாவதாரச் செய்யுட் பாடாந்தரம்.

## உருக்காட்டுப்படலம்.

(முற்றொடர்ச்சி.)

இறந்தனர் பிறந்தபய னெய்தினர்கொ லென்கோ
மறந்தன ரறிந்துணர்வு வந்தனர்கொ லென்கோ
துறந்தவுயிர் வந்திடை தொடர்ந்ததுகொ லென்கோ
திறந்தெரிவ தென்னைகொலிந் நன்னுதலி செய்கை.

என்னும் ௬௪-ம் செய்யுள்,

இறந்தபொருள் வந்துபய னெய்தினகொ லென்கோ
மறந்தன ரறிந்துணர்வு வந்ததுகொ லென்கோ
துறந்தவுயிர் வந்துட றுாந்ததுகொ லென்கோ
திறந்தெரிவ தென்னைகொலம் மங்கைமகிழ் செய்கை.

எனக்காணப்படுகின்றது. இவற்றுள், முன்னையதில் பின்னடிக ளெல்லாம் முன் உளதாயபொருள் இடையிலழிவுற்று பின்னுளதாய தாகிய பொருளுடையனவாக விருத்தலின் முன்னடியு மங்ஙனமிருத் தலே சிறப்புடையதாகலின் "இறந்தபொருள்வந்துபயனெய்தினகொ லென்கோ." என்னும் பின்னையதிலுள்ள முன்னடியே பொருத்த முடைத்தாதல் காண்க. இவ்வடிக்கு "அழிந்தபொருள் பின்தோன் றிப் பிரயோசனப்பட்டன வென்பேனோ" எனப்பொருள்கொள்க. பின்னடிகளிற் பாடங்களும் சிறப்புடையவாதல் காண்க.

௯௪

உழைக்குலத் தீய மாய வுருவுகொண் டுறுதல் செய்தான்
மழைக்கரு நிறத்து மாய வரக்கன்மா ரீச னென்பா
னிழைத்தட மார்பத் தண்ண லெய்யப்போய் வையஞ்சேர்வா
னழைத்ததவ் வோசை யுன்னை மயக்குத ற கரக்கன் சொல்ல.

என்னும் ௯௪-ம் செய்யுளில், "இழைத்தடமார்பத்தண்ணலெய் யப்போய்வையஞ்சேர்வா—னழைத்ததவ்வோசையுன்னை மயக்குதற் கரக்கன்சொல்ல." என்பது, "இழைத்தடமார்பத்தண்ணலேவுபட் டரக்கன்மாள்போ - தழைத்தமெய்க் குரலினோசைமயக்கிய துன்னை யம்மா" எனக்காணப்படுகின்றது. "சேர்வா - னழைத்தது" என் பது பொருத்தமின்மையிற் பின்னையதே பொருத்த முடைத்து.

௯௫

இக்குர லிளவல் கேளா தொழிகென விறைவ னிட்டான்
மெய்க்குரல் சாபம் பின்னை விளைந்தது விதியின் செய்கை
பொய்க்குர லென்று போலாம் பொருள்பின்னர்ப் பயக்கு மென்
கைக்குரல் வரிவில் லானு மிளையவன் வரவு கண்டான். [பான்

என்னும் ௯௫-ம் செய்யுள்,

இக்குர லிளவல் கேளா தொழிகென விறைவ னீட்டு
மெய்க்குர லன்று பொய்யா மென்றனன் விதியின் கோட்பாற்
பொய்க்குர லன்று மெய்யா மென்றுநீ மறுகப் போனான்
கைக்குரல் வரிவில் லானு மிளையவன் வரவு கண்டான்.

*

எனக்காணப்படுகின்றது. பொருட்சிறப்புஞ் சரிதவினையபு முடைமையிற் பின்னையதே பொருத்தமுடைத்து. என - என்றுசொல்லி, இவ்வெச்சத்தை என்றனன் என்பதோடு முடிக்குக.

ஷ

௮௮-ம் செய்யுளின் பின்னர்,

தவந்தந்த நெஞ்சிற் றனதாருயிர்த் தம்பி யோடு
நவந்தந்த குன்றுங் கொடுங்கானமு நாடி யேகிக்
கவந்தன்றன தாவி கவர்ந்தொருக் காலு நீங்காச்
சிவந்தந்து மெய்ம்மைச் சவரிக்குத் தீர்ந்து வந்தான்.

என ஒரு செய்யுள் காணப்படுகின்றது. இதுவுமீண்டுப்பொருத்தமுடைத்தாதல் சரிதம் நோக்கியுணர்க.

ஷ

ஆயானை யோரம் பினிலாருயிர் வாங்கி யன்பிற்
றாயான் வயினவ் வரசீந்தவன் சுற்று சேனை
மேயான் வருவா னெனவிட்டனன் மேவு காறு
மேயா னிருந்தா னிடைதிங்க ளிரண்டி ரண்டும்.

என்னும் ௯௯-ம் செய்யுளில், "மேயான் வருவான்" என்பது "மேயாய் வருவாய்" எனக்காணப்படுகின்றது. முன்னையது படர்க்கையாய் வருதலிற் பின்னையதே பொருத்தமுடைத்து. இதற்கியைய "அரசீந்தவன்" என்பது "அரசீந்துநின்" என வருதலும் பொருத்தமுடையதாதல் காண்க.

இன்னும் ஷ ௧௧௭-ம் செய்யுளின் பின்னர்,

சென்றே யடியே னினதின்னல் சிறிதே யவர்க்கங் குரைத்தபோ
தன்றே யரக்கர் வருக்கமுட னமையா தின்னு மடியேன்கை
மன்றே கமழுந் தொடைபோலா நிருதர் குழுவு மாநகரு
மென்றே யிறைஞ்சிப் பின்னருமொன் றிந்தையத் துணர்ந்தானீறில்லான்.

என ஒருசெய்யுள் காணப்படுகின்றது. இதுவு மீண்டுப் பொருத்தமுடைத்தாதல் பொருட்சிறப்பு நோக்கி யுணர்க. "அடியேன்கை மன்றே கமழுந் தொடைபோலாம்" என்றது "குரங்கின்

கையிற் பூமாலை போலும்" என்னும் வழக்குநோக்கிக் கூறியதுபோலும். மன்றல் - மன்று என விகாரமாயிற்று.

## சூடாமணிப்படலம்.

---

அன்றி யும்பிறி தொன்றுள தாரியன்
வென்றி வெஞ்சிலை மாசுணும் வேறினி
நன்றி யென்பதம் வஞ்சித்த நாய்களின்
நின்ற வஞ்சனை நீயு நினைத்தியோ.

என்னும் கஉ-ம் செய்யுளில், "நன்றியென்பதம் வஞ்சித்த நாய்களின்" என்பது "நன்றி மற்றிலை நாடிலி ராவணன்" எனக் காணப்படுகின்றது. "நாய்களின்" என்பது சிறப்பின்மையிற் பின்னையதே பொருத்தமுடைத்து.

௸ஷ

மேலுற விராவணற் கழிந்து வெள்கிய
நீலுறு திசைக்கரி திரிந்து நிற்பன
வாலுற வனையவன் றலையை வவ்வலிற்
காலுறு கணைகடிந் திடுவ காண்டியால்.

என்னும் கூக-ம் செய்யுள்,

மேலுறு மரக்கனுக் கழிந்து வெள்கிய
நாலிரு திசைக்கரி நடுக்க நீங்கிட
வாலமொத் தவன்றலை யனைத்து மவ்வயிற்
காலுறக் கணைகடிந் திடுவ காண்டியால்.

எனக் காணப்படுகின்றது. "வாலுற" என்பது பொருத்தமின்மையிற் பின்னையதே பொருத்த முடைத்து. காலுற-காற்கீழ்ப் பொருந்த.

௸ஷ

நீனிற வரக்கர்தங் குருதி நீத்தநீர்
வேலைமிக் காற்றுடு மீள வேலைசூழ்
ஞாலமுற் றுங்கடை யுகத்து நச்சருக்
காலனும் வெறுத்துயிர் காலக் காண்டியால்.

என்னும் ௬௩-ம் செய்யுளில், "வேலைமிக் காற்றெடுமீள" என்பது "வேலையின் மும்மடி யிரைத்து" எனவும், "காலமுற்றுங்கடையுகத்து" என்பது "ஞாலமுற்றுறுகடைநணுக" எனவுங் காணப்படுகின்றன. முன்னையது பொருட்சிறப்பின்மையிற் பின்னையதே சிறப்புடைத்து. கடைநணுக என்பதை, கடையை நணுகுவிக்க எனப் பொருள்கொள்க. விவ்விகுதி தொக்கு நின்றது. "குடிபொன்றிக் குற்றமு மாங்கே தரும்" என்பதிற்போல.

௬௭

மத்துறு தயிரென வந்து சென்றிடை
தத்துறு முயிரொடு புலன்க டள்ளுறும்
பித்தநின் பிரிவினிற் பிறந்த வேதனை
யெத்தனை யுளவவை யெண்ணு மீட்டதோ.

என்னும் ௬௬-ம் செய்யுளில் "பித்தநின்பிரிவினிற் பிறந்தவேதனை - யெத்தனையுளவவை யெண்ணுமீட்டதோ" என்பது "பித்தனின்பிரிவினிற் பிறந்திறப்பதங் - கெத்தனையளவையென்றெண்ணற்பாலதோ" எனக்காணப்படுகின்றது. "வந்துசென்று" என்பதற்கியையப் "பிறந்திறந்து" எனவருதல் பொருத்தமுடைமையிற் பின்னையதே பொருத்தமுடைத்து. நின்பிரிவினாலே வந்துசென்று இடையிலே தடுமாறுகின்ற உயிரோடு புலன்களு மசைவுறுகின்ற பித்தன் அங்ஙனமுயிர்வந்து சொல்லுதலினாலே பிறந்திறப்பதங் கெத்தனையளவை யென்று எண்ணும் பகுதியதோ" எனப்பொருள்கொள்க.

௬௮

இங்நிலை யுடையவன் றரிக்கு மென்றியேன்
மெய்ந்நிலை யுணர்ந்துழீஇ மிடைந்த தீதெனின்
பொய்ந்நிலை காண்டியான் புகன்ற யாவுமுன்
கைந்நிலை நெல்லியங் கனியிற் காட்டுகேன்.

என்னும் ௭௦-ம் செய்யுள்,

இந்நிலை யுடையவ னிருக்கு மென்றவுன்
மெய்ந்நிலை நிற்கநீ விடைதந் தாய பின்
பொய்ந்நிலை கொண்டியான் புகன்ற யாவுமுன்
கைந்நிலை நெல்லியங் கனியிற் காட்டுகேன்.

எனக்காணப்படுகின்றது. "மெய்ந்நிலை யுணர்ந்துழீஇ மிடைந்த தீதெனின் - பொய்ந்நிலை காண்டியால்" என்பது பொருட் கியைபின்மையிற் பின்னையதே பொருத்த முடைத்து. இருத்தல் - வாரா திருத்தல். "இங்கு வந்திலனே யென்னில்" என்பது முதலியவாகக் கூறியதையுட்கொண்டு அநுமன் இங்ஙனம் கூறினான் எனக. பொய் நிலைகொண்டு - இவன் சொல்வது பொய் என்று நீ நினைக்கத்தக்க நிலைமையைக்கொண்டு,

௬௪

வாங்கி னுடன் மலர்க்கையி னன்னது முன்னா
வேங்கி னனட லனுமனு மென்கொலிஃ தென்னா
வீங்கி னன்வியந் தானுல கேழும்வி ழுங்கித்
தூங்கு காரிருண் முற்று மிரிந்தது சுற்றும்.

என்னும் அ௬-ம் செய்யுளில், "அன்னது முன்னா - வேங்கினனடலனுமனு மென்கொலிஃதென்னா - வீங்கினன் வியந்தானுலகேழும்" என்பது "மன்னனை முன்னா - வேங்கினளவண் மாருதியென் கொலிஃ தென்னா - வீங்கினனுடல் மூவுலகோடும்" எனக்காணப்படுகின்றது. "மன்னனை முன்னா" என்பதும் "வீங்கினனுடல்" என்பதும் பொருட்கியைபுடைமையிற் பின்னையதே பொருத்தமுடைத்து. "இருண்முற்று மிரிந்த தொலைந்தே" என்னும் பாடமும் சிறப்புடையதாதல் காண்க.

சி. கணேசையர்.

---

உ

# நல்லொழுக்கம்.

## ஆறும் அதிகாரம்

[ஸ்ரீமத்-இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்த்தது.]

(முற்றொடர்ச்சி.)

டியூக் ஆப் உவில்லிங்டன் (Duke of willington) உடைய இயற்கைக்குணமானது நெப்போலியன் (Napolian) உடையதைப் போலமிகுந்த கோபத்தன்மையுடையது. ஜாக்கிரதையானமன அடக்கத்தாற்றான் அதைத்தடுக்கின்றதற்குத் திராணியுள்ளவராயினர். மற்ற இந்தியன் தலைவர்களைப்போல அபாயத்தின் நடுவே

அமைதியையும் சாந்தத்தையும் கற்றுக்கொண்டனர். வாட்டர்லோ (Waterloo) விலும் எங்கும் மிகவும் அவசியமான அபாய நிமிஷங்களில் கிஞ்சித்தும் படபடப்பின்றியும், வழக்கமாய் அடக்கப்பட்டதினும் அதிகமான குரலில் தன் உத்தரவைப் பிறப்பித்தார்.

வோர்ட்ஸ் வொர்த் (Words-worth) கவிஞரானவர் அவருடைய குழந்தைப் பருவத்தில் தடித்தனமும் கோபக்குணமும் மூர்க்ககுணமும் கோபமூட்டுங்குணமும் தண்டனை வரட்டுமென்ற பிடிவாதமும் உடையவராயிருந்தார். அவருடைய ஜீவகாலத்திலுண்டாகிய அனுபவத்தால் அவருடைய குணமானது சிக்ஷைப்படுத்தப்பட்டபொழுது மிகுதியும் மன அடக்கத்தை அப்பியசிக்கப் பழகிக்கொண்டனர். ஆனால் குழந்தைப் பருவத்தில் அவரிடத்தில் விளங்கியகுணங்களானவை பிற்காலத்தில் அவருடைய சத்துருக்கள் தோஷங்கூறுவதை எதிர்ந்து கிரஹிக்கும் திறமை பெறுவதில் உபயோகமுள்ளவைகளாயிருந்தன. வோர்ட்ஸ் வொர்த் (Words-worth) உடைய சரித்திரத்தின் எல்லாக்காலங்களிலும், அவருடைய தன் மரியாதைதானே தீர்மானித்துக்கோடல் திறமையைத் தானே உணர்தல் ஆகிய குணங்களைப் பார்க்கிலும் விசேஷமாய்க் குறிப்பிடத்தக்கது வேறொன்று மிருந்ததில்லை.

முரட்டுக் குணமானது பக்குவப்படாத ஊக்ககுணமாகச் செறிந்திருந்த மனிதனுக்கு உபதேசியர்கிய் மார்ட்டின் (Martyn) என்பவர் நிதர்சனமாக இருந்தார். பையனாக இருக்கும்பொழுது படபடப்பும் எறிந்து விழுவதும், முற்கோபமுமாகிய குணமுடையவராயிருந்தனர். ஆனால் அவருடைய கெட்டகுணத்தின் போக்கை இடையறாது போராடுவதால் அதை முழுதும் வென்று தான் மிகுதியும் இச்சித்த பொறுமை யென்னும் பாக்கியத்தை யடைவதற்கு வேண்டிய பலத்தை வரவரப்பெற்றார்.

ஒரு மனிதன் தன் சரீர அமைப்பிற் பலஹீனமாயிருக்கலாம். ஆனால் நன்மையான குணத்தை அருளப்பெற்று அவனுடைய சித்தமானது பெருந்தன்மையும், சுறுசுறுப்பும், மேன்மையும் இராஜத்துவமும் பொருந்தியிருக்கலாம். பேரடே (Faraday) உடைய நல்லொ

ழுக்கத்தையும் சாஸ்திரத்திற்காகத் தன்னயம் பாராமல் முயற்சித்த தையும் பற்றித்தேர்ந்தவராகிய டின்டால் (Tyndall) நேர்த்தியாய் விவரித்துச் சொல்லுகையில், திடமும் சுவயமான சுபாவமும் எரிச்சலான குணமுமிருப்பினும் மிகுந்த உருக்கமும் அறிவுமுடையவராக அவரைவிளக்கினர். அவருடைய இனிமைக்கும், சாந்தத்திற்கும் அடியில் ஓர் எரிமலையின் உஷ்ணம் இருந்தது. அவர்முற்கோபமும் எரிச்சலான சுபாவமுமுடையவராயிருந்தார். ஆனால் அவர் தன்னை உயர்வுறச் சிக்ஷித்தமையால் தன் எரிச்சலை வாழ்க்கைக்குப் பிரதான பிரகாசமும் சாதகசக்தியாகவும் மாற்றிக்கொண்டனர். உபயோகமற்ற இச்சைகளிற் பயனுறும்படி விடவில்லை.

பேரடே (Faraday) உடைய ஒழுக்கத்தில் நாம் கவனிக்கத் தக்க ஓர் அழகிய இலட்சணம் உண்டு. அதைத்தான் மனஅடக்கமென்று சொல்லத்தகும். அதாவது, தன்னயமறுப்பேயாம். அவர் பாகுபாட்டின் பரிசோதனையில் தன் காலத்தைக்கழிப்பதால் மிக்க செல்வத்தை விரைவிற் சம்பாதித்திருக்கலாம். ஆனாற் கௌரவத்துடன் அந்த இச்சையை மறுத்து சுவயமான சாஸ்திரத்தின் வழியைப் பின்பற்றி, ஆராய்வதே இலாக்கியமாகக்கொண்டனர். "அவர் ஜீவித்திருந்தநாளைக் கணக்கிடுகையிற் கொல்லனுக்கு மகனும், புஸ்தகம் கட்டுகிறவனிடம் வேலைபழகுபவனுமாயிருந்த இவர், ஒருபக்ஷம் லக்ஷத்து ஐம்பதினாயிரம் பவுனும் மற்றொருபக்ஷம், செல்வப்பயனில்லாத சாஸ்திரமுமாக இவ்விரண்டில் எதைக்கைப்பற்றுவதென்பதைத் தீர்மானிக்கநேரிட்டு, பிற்கூறியதையே தெரிந்தெடுத்து ஓர் ஏழையாக இறந்தனர். இங்கிலாந்திற்குரிய சாஸ்திரசம்பந்தமான கீர்த்தியை நாற்பது வருஷகாலம் அந்தஜாதியாருக்குள் உயரத்தூக்கிக்கொண்டிருந்த மகிமையானது அவருடையதாக இருந்தது." என்று மிஸ்டர் டிண்டால் (Tyndall) என்பவர் சொல்லுகின்றனர்.

ஒரு பிரான்சுக்காரன் தன்னயம்பாராட்டாமையின் இதேவித திருஷ்டாந்தத்தை யெடுப்போம். 'ஆங்குயிட்டில்' (Anguctil) என்னும் சரித்திரக்காரன் பிரான்சுதேசத்திலுள்ள சொற்பவித்வான்களுள் ஒருவராயிருந்தார். அவர் நெப்போலியன் (Napolean) உடைய ஆளுகைக்குட்பட மறுத்தனர். அவர் ரொட்டியும் பாலும்மாத்தி

ரம் உண்டும் ஒருநாளைக்கு மூன்று குமாரர்களுக்குமட்டும் செலவுக்குக்கொடுத்தும் தரித்திரதசையில் மூழ்கியிருந்தனர். "மாரங்கோ (Marengo) ஆஸ்ட்டர்லிட்ஸ் (Austerlity) ஜயவீரருக்காகஇன்னும் இரண்டு குமாரர்களை மீதப்படுத்திவைத்திருக்கிறேன்" என்று அவர் சொன்னார். ஆனால் நீர் நோயில் விழுந்தால் உமக்கு வெகுமானசம்பளம் வேண்டியிருக்கும். மற்றவர்கள் செய்கிறதைப்போல நீர் ஏன் செய்யக்கூடாது. நீர் உய்வதற்குச் சக்கிரவர்த்தியின் தயவுவேண்டும். அவருக்குவந்தனம்செய்யும்" என்று அவருடைய இஷ்டரொருவர் சொன்னார். "நான்சாவதற்கு அவருடைய தயவுவேண்டேன்" என்று அந்தச்சரித்திரக்காரர் மறுமொழி தந்தனர். ஆனால் ஆங்குயிட்டில் (Anquetil) என்பவர் வறுமையால் இறந்தனரல்லர். அவர் தொண்ணூற்று நான்குவயசு வாழ்ந்தனர். அவருடைய அந்தியக் காலத்தில், ஓர் இஷ்டனைநோக்கி "வாரும், இதோபாரும் இன்னும் பூரணஜீவனுடன் ஒருமனிதன் சாகிறான்." என்று தன்னைப்பற்றி மொழிந்தனர்.

ஸர் ஜேம்ஸ் ஔட்ரேம் (Sir-James Outram) என்பவரும் கௌரவமுள்ள தன்னயம்பாராட்டாமையாகிய இதே குணத்தை வேறுவகையான முயற்சியில் விளக்கினார். பெரிய அரசனாகிய ஆர்தர் (Arthur) ஐப்போலத்தன் சொந்த நயத்தை மறுத்த ஆண்பிள்ளையாக விருந்தனர். அவருடைய வாழ்நாள் முழுதுமுள்ள நடப்பில் தன்னயம் பாராட்டாமையாகிய கௌரவமான குணமே விளங்கிற்று. ஒவ்வோர் காலத்திற் செய்யும்படி ஏவப்பெற்ற இராஜகாரியத்தில் அவருக்குச்சொந்த அபிப்பிராயம் வேறுபட்டிருப்பினும் தன் கடமைவிஷயத்தில்ஒருமுறையுங்கூடநெறிதவறினவரல்லர். இவ்வாறே ஸ்சின்டி (Scinde) தேசத்தின்மீது படையெடுக்க அவருக்குச் சம்மதியின்று. ஆனால் அந்தப்போர்க்களத்தில் அவர்செய்த வேலைகள் மிகவும் கீர்த்திபெறத்தக்கதாயிருக்கிறதாக, ஜெனரல்-ஸர்-ஸி. (General-Sir-C. Napier) ஆல் அங்கீகரிக்கப்பட்டன. ஆனால் யுத்தம் முடிவானபொழுது ஸ்சின்டி (Scinde) தேசத்திற்பறித்த கொள்ளைப்பொருள்கள் அந்தஜயவானுடையகாலிற்கிடந்தன. "இந்தயுத்தம் செய்தது எனக்குச் சம்மதியின்று. இந்த வெகுமானப்பொருளில் எனக்குப்பாகம்வேண்டியதில்லை. என்று ஔட்ராம் (Outram) சொன்னார். (தொடரும்.)

சிவமயம்.

# ஆத்திசூடிச் சூத்திரவிருத்தி.

(முற்றொடர்ச்சி.)

இனி; மறுமைப்பயனென்பது அடுக்குற்பிறவியுந் துறக்கவின்பமும். இம்மையிற்செய்யும் அறவினையெல்லாம் இவ்வின்பங்களையே தருமென்க. வீடுவீட்டின்பமோ வெனின் இதனுனெய்துவதன்று. அதுபற்றிச்செய்யும் வினை நல்வினையின்பாற்படாது. இதுபற்றியன்றே திருவள்ளுவரும் 'இருள்சேரிருவினையுஞ் சேராவிறைவன்' என நல்வினையையும் வீட்டின்கட்படுத்தாராயினர். வீட்டின்பம் நிட்காமியமாகிய சரியைகிரியை யோகங்களானும் அவற்றின் வாயிலா நின்ற ஞானத்தானும் எய்துவதோர் பெரும்பேறுமென்பர்.

இனிச்; சாதிதருமமென்பதொன்று. அது அவரவர் தத்தம் இனவொழுக்கிற் பிழையாதிருத்தலும், இன்னாருக்கு இன்னது உரியதென்றமைத்தபடி நிற்றலுமாம். அதாவது ஆண்மகன் ஆண்டன்மையிற் பிழையாமையும், பெண்மகள் அவடன்மையில் வழுவாமையுமென்க. அவற்றினடையே ஆன்றோர் கூறும் ஒழுக்கங்களைக்கடைப்பிடித்தொழுகலுமாம். அவள் தன்மை நாணம் மடம் அச்சம் பயிர்ப்பென்பன. இதுவேயன்றிப் புலாலுண்ணுங் குலத்துளொருவன் புலான்மறுத்தல் கூடாதென்பதும், கட்குடியன்மகன் கள்ளையொழித்தலாகாதென்பதும் சாதிதருமமன்று. இழிந்த குலத்துள் ஒழுக்கம்பெற்றுயர்ந்தோனாகலாம். அக்குலத்திழிந்தாளொருத்தி திருந்தியுயர்ந்தோளாகலாம். அதுவுஞ் சாதிதருமமேயாம். அரக்கர் குலத்து வீடணன் ஒழுக்கம்பெற்றுயர்ந்தோனாயினன். பெண்டகைமையிழந்த அக்குலத்துத் திரிசடை யொழுக்கமுற்றுயர்ந்தோளாயினள். ஆகவே யவரவர்க்கது சாதிதருமமேயாயிற்று. சாதிதருமமென்பது குலத்தைக்கருதுவதன்று. மக்களுள் இருபாலர்க்கும் அமையத்தகு நல்லொழுக்கமென்க. சிறப்புடைய வுயர்திணை மக்கட்கே, தேவர்க்கே, வானரகர்க்கேயன்றி யஃறிணை விலங்கே, புள்ளே

யென்றிவற்றிற்குஞ் சாதிதருப முண்டென்க. சுக்கிரீவனும் அநுமனும் அங்கதனும் வாலியுமே சான்றாவர். அன்றி; மழைக்காலிருட்டெனினும் மந்தி கொம்புபிழையாதென்பதும் 'மாம்பயில்கடுவ'னெனக் கூறுமாறுங்காண்க. கவரிமான் செயலுமுணர்க. ஏனைப்புள்ளுக்கும் கண்டுழிக்காண்க. பிறவுமன்ன. விரிக்கிற்பெருகும்.

இனி; அறமெனப்பொதுப்படக் கூறினமையின் இல்லறந் துறவறமென்னு மிரண்டறங்களையும், அவற்றதொழுக்கநெறிகளையுங்கொள்க. அவற்றுள் இல்லறம், அற்புடை நெறியிற் கற்புடையவளொடு, விருந்து புறந்தந் தருந்தவர்ப்பேணி, வரையா நாளின் மகப்பேறு குறித்துப், பெருநலந்துய்க்குந் திருநல்வாழ்க்கை. துறவறம்; பொன்னே புவியே பெண்ணே யென்றிவை, யென்னே யெனவகன் றிருவினையொப்பும், ஆற்றலும் அருளும் போற்றிய நெறியிற், பேரருள் வழங்கும் பெற்றித்தன்றே; இவை உரைச்சூத்திரம். அவற்றதொழுக்கநெறிதான் அறமெனப்படும். அது முறையே மனுமுதலிய நூல்களின் விதித்தனசெய்து விலக்கியன வொழித்தலும், பற்றற்று நிற்றலுமாம். இவ்விரண்டறங்களும் அன்பேயருளே யென்றிரண்டானுங் நடத்தப்படுவன. அன்பு தொடர்புடை யார்மாட்டுவகை. அருண்மற் றெல்லா வுயிரினு முவகை; இவை உரைச்சூத்திரம்.

அன்றியிற்; பொதுப்படக் கூறியதனான் ஈண்டு அறம் மேலே கூறிய இல்லறமே துறவறமே யென்றிவற்றின்மேல் வைத்துப் பிரமசரியங் கிரகஸ்தம் என்றிரண்டுநிலையினர்க்குங் கூறியதெனினும்,இளைஞர்க்குங் குமரர்க்குங் கூறியதெனினும் பொருந்தும். அவ்வாறாக,

அதனுள் அறம் விரும்பு என்பதோரதிகரணம். செய விரும்பு என்பதோ ரதிகரணம். ஆக இரண்டதிகரணத்த திச்சூத்திரமென் றுணர்க. இவ்விரண்டும் ஒன்றற்கொன்று காரணகாரியங்களாய் ஒரு பொருண்மேல் வருதலின் ஒரு சூத்திரத்தாற் கூறினர். இவ்வாறே வருஞ் சூத்திரங்களுள்ளும் (எல்லாவற்றிற்குமன்று) இடைக்கிடைச் சிலப் பல சூத்திரங்கட்கு அதிகரண மமைத்துக்கோடல் கண்டுகொள்க. தன்னாற் கூறப்படும் பொருளும், அதற்குப் பிறர்கூறும் பக்கமாகிய ஆட்சேபமும், அதனைமறுத்துக்கூறுந் துணிபும், இயைபும் என்னுமிவற்றின் நிலைக்களம் ஈண்டு அதிகாணமெனக்கொள்ளப்படும்.

அவற்றுள் இயையு, பொருளியையும், சூத்திரவியையும், வினையியையும் எனமூவகைப்படும். அவையெல்லாம் ஆண்டாண்டுக் காட்டுதும்.

---

## முதலதிகரணம்.

இம்முதலதிகரணத்தாற் கூறப்படும் பொருளாவது அறத்தை நிறுத்துதற்பொருட்டு முதற்கண் வேண்டுவதிதுவெனச் சாதித்தல.

### அறம்விரும்பு என்பதாம்.

'ஒல்லும் வகையா னறஞ்செய்க' வென்றாற்போல அறஞ்செய்கவென்றது விரும்பென்றார்; அறஞ்செய்தற்கு ஆற்றலும் பொருளும் வேண்டியிருத்தலின் அவ்விரண்டுமியலாதார் என்செய்வதென்பாரை நோக்கி இயலாதாயினும் அவர்தம் நோக்கமாயினும் அதனிடத்துச் சென்றால் அதுவும் அறமெனப்படுமென்பதே கருத்தாக அங்ஙனங் கூறினரென்க. தனதுயிருடல்களுக்கும் பிறருடற்கும் நன்மைதரும் அறத்தைச் செய்தற்கு ஆற்றலும் பொருளும் அரிதே பெறினும் அந்தோ! அதனை விரும்பும் மனமும் அதுபெறவேண்டுமா! விரும்பு என்றதனால் மனத்தூய்மை பெறப்படும். விருப்பம் மனத்தினிகழ்காரியம்; அது தூய்மையது. தூயன நினைத்தலே மனத்திலமையவேண்டுவதென்பதாயிற்று. ஆகவே அறமுந்தூயதாமென்பதும், தூயனவற்றையே நினைத்தல் வேண்டுமென்பதும், தூயன நினைத்தலே மனத்திற்குச் சாதிதருமென்பதும், அறத்தைநினைத்தோரும் தருமிகளேயென்பதும், அறத்தைச்செய்தார் பெறும்பேறு செய்யவியலாது அதனை விரும்பினார்க்கு முண்டென்பதும், அறநினைவிருந்தால் எவ்வாற்றானும் ஒல்லும் வகையானதனைச்செய்ய முயல்வர் என்பதும் பெறப்படும். இதுகருதியே பின் "அறனைமறவேல்" எனவுங் கூறினர். இனிச் செய்தலுக்கு முன்னாவதும் அதற்கு ஏதுவாவது மனநினைவாகிய விருப்பமாதலானும், சார்ந்ததன் வண்ணமாய் எவ்விடத்தும் எச்செய்கையினுஞ் செல்லுமியல்புடைய மனதை அறத்தின்வழிச் செலுத்தின் அது தூய்மைபெற்று அத்தூய்மையுந் தருமமெனப்பெறுதலானும் விருப்பத்தையே ஈண்டு முதற்கண்வியந்தாரெனலமையுமென்க. அல்லதூஉங் கல்வியிலுஞ் சிறுவர்க்கு முதற்

கண் அறிவும், அதனுன் நன்னெறியின் விருப்பமும், அவ்வேதுவாகச் செய்மையும் வேண்டப்படுதலான் முன்னர் அறத்தை நிறுத்திப்பின் அதன்மாட்டுவிருப்பத்தை யேவினரெனவுங் கொள்க. அன்றியில் இளம்பருவத்தே யற விருப்பமுண்டாயின் அது பசுமரத்தாணிபோலப் பதிந்து குமாரப் பருவமெய்தியக்கால் அச்செய்கையில் அவரை நிறுத்துமென்பது கருதியுமாமென்க. விரிக்கிற்பெருகும்.

முதலதிகரண முடிந்தது.

———:o:———

## இரண்டாமதிகரணம்.

முதலதிகரணத்தில் அறமும் அது செய்தற்கு ஏதுவுங்கூறினர். ஏதுக்கூறியதுணையே செய்கையுஞ் சாதித்தற் கெழுந்ததிவ்வதிகரணம்.

### செயவிரும்பு என்பதாம்.

செய்தலை விரும்பென்பது, செய்கவென்று ஒருதலையாயேவாது விரும்புஎனக் கூறினர். அவ்வாறு இலேசங்கூறியது இடிக்காது நயத்தினல் நல்வழிப்படுத்தலென்னும் விதிநயம் பற்றியென்க. பொருளிலார்க்கு அறநெறியின் விருப்பமுண்டாவதியல்பு. அவ்விருப்பம் பொருளுண்டாங்கால் ஒழிவதுமவ்வாறியல்பேகாண்; அவ்வாறின்றி இல்லாத போழ்துண்டாகிய விருப்பம் பாழ்படாது உண்டாம் போழ்து அதனைச்செய்கையில் வைக்கவென்பார் செயவிரும்பென்ருர். பின் செய்தலை முன்விரும்பெனச் சிறுவர்க்கும் முன்விரும்பிய அறத்தைப்பின் செய்யவிரும்பெனக் குமரர்க்குமாக இருபருவத்தினர்க்கும் ஒருசேரக்கூறினரெனினும் பொருந்தும். விரும்பியவன் செய்யாதொழியானன்றே, ஆயிற்செயவிரும்பென்றது மிகையாமன்றேவெனின்; விரும்பினனேனும் ஆற்றலும் பொருளுமின்மையாலோ, அவைதாம் உளவாகவைத்தும் அது செய்யுமாறுணராமையாலோ, உணர்ந்துவைத்தும் வேறோரிடையூறு கருதியோ, இடையூறின்றாகப் பொருளழிவுக்கஞ்சியோ செய்யாதொழியினுமொழியுமென்று கருதி எவ்வாற்ருனும் ஒல்லும்வகையாற் செயவிரும்பென்ருரென்க. இதுபற்றியன்றே பின் "தானமதுவிரும்பு" என்றுங்கூறினர்.

அல்லதூஉஞ் சிருட்டிமுதலிய ஐந்தொழிலாற்றனுக்கிக் கடவுண்மாட்டு விருப்பமெய்தினற்கு வேறு செயுமாறில்லையாக விருப்பமொன்றேயவற் கமையும் மற்றுச்செயல்வேண்டா வென்பாரைமறுத்து அவ்விருப்பம் அவரையன்புசெய்தற்கேதுவா மாகலின் அவ்வன்பை அறத்தினுக்காக்கி அதனைச் செயவிரும்பென்றானுமாம். அவ்வாறயிற் கடவுளையவர்தந்தொழிலான் வியந்துவிரும்பலும் அவரை வழிபடுவகையுளொன்றாதலின் விருப்பமொன்றேயமையுமே செயவிரும்பென்றது எற்றிற்கெனின், அவ்விருப்பம் இடையறாது நடைபெறுதலின் அதுவும் செய்கையேயாமென்பார் செயவிரும்பென்றானென்பதுங்கொள்க. இதனான் மனங்காயங்களாகிய இருகாரணங்களும் அறத்தின் ஒத்து நின்றமையுணர்க. அங்ஙனம் இரண்டே கூறியதாயினும் இனம்பற்றிவாக்கும் அமையுமென்க. அறத்தை விரும்பிச் செய்தானொருவன் அதனைப் பிறர்க்குணர்த்தலுஞ் செய்வன். இதனான் முதலதிகாரத்தோடு பொருளியைபு பெற்றமைகாண்க. இளமை நீங்கிய குமரப்பருவத்தினர்க்குச் சொல்லுங்கால் செயவென்பதனைச் செயப்படு பொருண்மை யுணர்த்தும் எதிர்கால வினையெச்சமாகக்கொள்க. விரிக்கிற்பெருகும்.

இரண்டாமதிகரண முடிந்தது.

——:o:——

இனி; அறஞ்செய விரும்பு என்றதனன் மறஞ்செய விரும்பேல் என்னும் எதிர்மறையும் பெறப்படுவது காண்க. மறம்-பாவம். பாவகாரியத்தை விரும்புதலும் பாவஞ்செய்தலோடொக்கும். பாவத்தை விரும்பியவன் அது தன்னுலியலாமையாலன்றே செய்யாதொழிந்தான். இயலுமேற் செய்தேதீர்வான். அதுபற்றியே பாவத்தை விரும்பியவனும் பாவியாம்.

இனி; அறம் பொருள் இன்பம் வீடென வெண்ணப்பட்ட நான்கனுள் முதற்கணின்றது அறம்; ஏனை மூன்றும் அறத்தினனெய்துவ வாகலினென்க. எங்ஙனமெனின்; இம்மையிற்செய்யும் அறம் 'சிவிகை-பொறுத்தானோ டூர்ந்தானிடை' யென்பதனன் மறுமையிற் பொருளையும், அப்பொருளெய்துவது அறத்தினனாதலின் அப்பொருட்கு முதற்காரணமாகிய 'அறத்தான் வருவதேயின்ப' மென்

பதனுன் மறுமையினின்பத்தையும், காரணகாரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றிப் பெருகிவருவதாகிய பிறவிப்பெருங்கடலி லகப்பட்டுழலும் உயிர் அவ்வுடலோடு கூடித்துய்க்கும் இன்பம் அநித்தமாகலின் அவ்வுடல் நீங்கியவழி யுயிர்க்குச் 'சிறப்பீனும், எனவும் 'பொன்றுங்காற் பொன்றாத்துணை' யெனவும், 'வாழ்நாள்வழியடைக்குங்கல்' எனவும் அறங்கூறுதலான் மறுமையின் வீட்டையுந் தந்து இவ்வகையே ஏனைப்பொருளு மின்பமும் வீடுமென்னு மூன்றிற்கு முதற்காரணமாய் நிற்றலான் அறம் முதற்கண் வைக்கப்பட்டதென வுணர்க. இது கருதியே இவ்வாசிரியரும் தாம் அறமும் பொருளும் எடுத்தோதப்புகுந்த இந்நூலுள் அறத்தை முதற் சூத்திரத்தாற் கூறுவாராயினர். அல்லதூஉஞ் சிறுவர் முதற்கண் உணரவேண்டுவது அறமெனக்கருதி யதனை முதற்க ணுணர்த்தினரெனவுமாமென்க. ஆகவே அறமே செய்யத்தக்க தென்பதாயிற்று.

அற்றேல்; ஏனைப்பொருளு மின்பமும் செய்யவேண்டாவோ வெனின்; அறம் ஓர் உருவப்பொருளன்று. முயலப்படின் அம்முயற்சியே யதுவாகிப் பயனெய்துவிக்கும். பயனளிப்பது முயற்சியேயாக அறமெற்றிற்கோவெனின்; முயன்றும் பொருளெய்தாதெய்க்கும் மக்களுமுளரே. ஆதலின் முயற்சியே பொருட்குக்காரணமாதலில்லை. அம்முயற்சியையெழுப்பி அதனாற்பயனளிக்கும் அறமே பொருட்குக் காரணமாம். ஆகவே பொருளுஞ் செயவேண்டுவதென்பதாயிற்றென வுணர்க. இன்பமு மஃதே. ஏனைவீடுமதுவேயென்க. ஆகவே அறமொன்றே ஏனைப்பொருளே, இன்பமேவீடேயென்னும் மூன்று காரியங்களையும் ஏற்று அம்மூன்றுறுதிகளாயு நிற்பதுணர்க.

இனி; உலகம் தொழிற்படுதற்கும் வீடுபேறடைதற்கும் வேண்டுஞ் செயல்கள் இரண்டு. அவை மனுமுதலிய நூல்களின் விதித்தன செய்தலும் விலக்கியன வொழிதலுமாம். 'விதித்தன செய்தலும் விலக்கிய வொழிதலுங், கதித்தரு முலகிற் காண்பன பயனே' 'அறவதாம், புண்ணியம் பாவமென்றெண்ணவும் படுமே' 'நல்வினை தீவினை யென்பவு மன்ன' இவையுரைச் சூத்திரம். உறுதிப்பொருள் நான்கனுட் பொருளு மின்பமும் புண்ணியத்தையே யன்றிப் பாவ

முந் தருவன. ஏனைவீடு புண்ணியத்தின் பயனது. இதுபற்றி யன்றே 'அறவாழி யந்தணன்' என்றாற்போல அறத்தைப் பிறிதோர் கடவுட்கேற்றி வீடெனக் கூறுவாருமுளராயினர். அது செய்கை யின் பாற்படாது. இனிச் செய்கையின் வைத்துப் புண்ணிய மொன்றே பெறுவது அறமொன்றுமேயாம். அவ்வறஞ் சாராது செய்யப்படும் ஏனைப்பொருளு மின்பமும் பயனுடைய வல்ல; பாவ முஞ் சார்தலி னென்க. 'அறந்தலைத்தந்த வருப்பொருடாங்கி' எனவும் 'மற்றெல்லாம்—புறத்த புகழுமில' வெனவும் பிறர் கூறுமாறுங் காண்க. ஆகவே முற்பிறவியிற் செய்துபோந்த அறமேதுவாக வெய்திய பொருளின்பங்களான் அடுத்துவரும் பிறவியி னவைதா மெய்துதற்கு இம்மையின் அவ்வறமே செய்த வென்பது பெறப் பட்டது.

இனி; அறமென்பது அருட்டன்மையது. அருளே உலகத் தோற்றத்திற்கேது. அருளுண்டாயவழி யெல்லாவறங்களு முண் டாம். அருளான் அறம் பலதிறப்படும். அவையெல்லாந் 'தான மது விரும்பு' முதலிய அறத்தின் பாற்படுஞ் சூத்திர விருத்தியுட் கூறுதும். ஆண்டாண்டுக் கண்டுகொள்க.

இனி அறஞ்செய விரும்புதலா னெய்தும் பயன் இனையவாக அது செய்தான் உலகினுயிர்களாற் போற்றவும் பெறும். 'கொல் லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி-யெல்லா உயிருந் தொழும்' என் பர். அன்றியில் அவனைப் பாவம் வந்தடையுமாறு மிலையென்க. 'அறனை நினைவானை யல்பொரு ளஞ்சும்' என்ப. விரிக்கிற் பெருகும்.

திருவள்ளுவர்.

"செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி"

(தொடரும்.)

கோ. வைத்தியலிங்கம்பிள்ளை.

---

# கதாசரித் சாகரம்.

## ௫-வது சதுர்த்தாரிகாலம்பகம் ௧-வது தரங்கம்.

[ஸ்ரீமத்-வீராசாமி ஐயங்காரவர்கள் மொழிபெயர்த்தது.]

(முற்றொடர்ச்சி.)

அப்போது பிறரையுபசரித்தே ஜீவித்துவருகின்றபுரோகிதன், பொருளாசையால் மாதவனைத்தனதுகிரகத்திலேயே வசிக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ள அவன் றன்னைச்சேர்ந்தவேஷதாரிகளுடன், விநாசத்திற்கு ஹேதுவான நீர்க்கோழி, வசிப்பதற்கு மரக்கிளையையடைவதுபோலப் புரோகிதன் வீட்டையடைந்தான். அங்ஙனம் வசிக்கின்றமாதவன், கிருத்திரிமமான மாணிக்கக்கற்களாற் பற்பல விதமாகச் செய்யப்பட்டுள்ள ஆபரணங்கள் நிறைந்தவொரு பெட்டியை அவன்வீட்டறையில் வைத்துக்கொண்டு இடையிடையேசிற்சில சமயங்களில் தனித்துப் புரோகிதனை அழைத்துச்சென்று அதனைத் திறந்து கபடமாய்க்காண்பித்து அதிலுள்ள ஆபரணங்களினாலவன் மனத்தைப்பசும்புற்களாற் பசுவின் மனத்தைக்கவர்வதுபோற் கவர்ந்தனன். பின்பு அப்புரோகிதன் அந்த ஆபரணங்களை யுயர்ந்த விலைமதிப்புள்ளனவென்று நம்பியிருக்கின்றானென்பதை யறிந்த மாதவனிதுதான் சமயமென்று கருதி ஆஹாரத்தைக்குறைத்துத்தின்று தன் தேகத்தை மெலியச் செய்துகொண்டு மிகுந்த ரோகமுற்றவன்போலப் படுத்தபடுக்கையுடனிருந்தான்.

அத்தருணத்திற் புரோகிதனிவனைப்பார்ப்பதற்காக வந்துபடுக்கையருகிலுட்காரவும் சூதாடிகட்கரசனாகிய மாதவன் புரோகிதனையுற்றுப்பார்த்து ஓ பிராமணோத்தமரே, இப்பொழுதென் சரீரத்தின் நிலைமை முற்றிலும் மாறுபட்டிருக்கின்றது. ஆதலாலிஹபரசாதகமாகும்படி எனது பொருள்களனைத்தையும் தானஞ்செய்யப்போகின்றேன்; அதற்காகவொருபிராம்மணசிரேஷ்டரை யழைத்துவரவேணும். தெளிந்தமனதுடையவனுக்கு நிலையில்லாத உயிர்வாழ்க்கையிலாவது தனங்களிலாவது பற்றென்பதெப்படி யுண்டாகுமென்றனன்.

இதனைக்கேட்டதும், தானம்வாங்கி ஜீவித்தலையே தன்றொழிலாக வுடைய புரோகிதனும்மதெண்ணத்தின் வண்ணமே செய்கின்றேனெ ன்றுசொல்ல உடனேமாதவன் அவன் கால்களில்வீழ்ந்து நமஸ்கரித் தனன். பின்புபுரோகிதன் சென்றழைத்துவந்த வொவ்வொருபிரா மணனையும் மாதவன் கவனியாது தானம்வாங்குகின்றவர் இன்னும் விசேஷ யோக்கியதையுள்ளவராக இருத்தல்வேண்டுமென்ற எண் ணத்தினாற் சிரத்தையில்லாதிருக்கின்றவன் போலபிநயித்தான். இத னைப்பார்த்ததும் அவனுடைய பக்கத்திலிருக்கின்ற சூதாடுவோனொ ருவன், எங்களரசர்க்கு ஸாமான்யபிராமணர்களிடத்தில் மனம்பற் றாது. ஆதலால் சிப்ராநதிக்கரையிற் சிவனென்று பிரசித்திபெற்ற ஒரு பெருந்தவத்தினரிருக்கின்றார். இப்பொழுது அவர் இவர்மனத் திற் கிசைந்தவராயில்லையாவென்று கேட்கவேண்டுமென்றனன்.

அப்படியவன்சொல்லியதைக்கேட்டதும் மாதவன் வியாதியி னால் துன்புறுகின்றவன்போலப் பாசாங்குடன்புரோகிதனைப் பார் த்து ஓகோ! அனுக்ரஹிக்கவேணும். அவரையொத்தபிராமணர் உல கத்திலொருவருமில்லை; அழைத்துவரவேண்டுமென்றான். உடனே புரோகிதன் அப்படியேசெய்கிறேனென்று சிவனுடைய சமீபத்திற் செல்ல அச்சமயத்திலவன் கண்களைமூடிக்கொண்டு தியானஞ்செய்ப வன்போலசையாதிருக்க அவனைப்பிரதக்ஷிணஞ்செய்துவிட்டுக் கைக ளைக்கட்டிக்கொண்டு எதிரிலுட்கார்ந்திருந்தான். அப்போதந்தச்சூ தாடிச்சிவன் மெல்லமெல்லக்கண்களைவிழிக்கவும் புரோகிதன் அவனை நமஸ்கரித்துவணக்கத்துடன் நின்றவண்ணமே, ஹேபிரபுவே, தாங் கள் கோபங்கொள்ளாதிருந்தாலொருகாரியம் தெரிவித்துக்கொள்ளு கிறேனென்றான்; அதனைச்செவியுற்றசிவன் வாய்திறந்துபேசாமலே சாடையினால் தெரிவித்துக்கொள்ளும்படி யனுமதிசெய்யப், புரோ கிதன்சிவனைநோக்கி ஸ்வாமீ, தெக்ஷிணதேசத்தினின்றும் பெருஞ் செல்வரான மாதவனென்றபெயருடையவொரு ராஜகுமாரரிங்கு வந் திருக்கின்றார். அவர்தேகஸௌக்கியமில்லாமையால் தன் பொருள் கள் யாவற்றையுந்தானஞ்செய்துவிடுவதாயுத்தேசிக்கின்றார். இவ்வி ஷயத்தில்தங்கட்கபிப்ராயமிருந்தால் விலைமதிப்பற்றபற்பலவிதமான இரத்தினங்களாலியற்றிய ஆபரணங்களுடன் பிரகாசிக்கின்ற பொரு

ள்களனைத்தையும் கிரகித்துக்கொள்ளலாமென்று சொல்ல அதனைக் கேட்ட சிவன் மெல்லமௌனத்தைவிட்டு ஓ பிராமணரே! பிக்ஷையெடுத்துண்கின்ற பிரமசாரியாகிய எனக்குத்திரவியங்களினாலென்ன பிரயோஜனமிருக்கின்றது என்றனன்.

அதற்குப்புரோகிதன் ஹே! பெருந்தவம்புரியும் பிராமணோத்தமா! இவ்விதஞ்சொல்லலாகாது. ஆச்சிரமங்களின்கிரமத்தைத்தாங்கள் அறியாதவர்களல்லர். விவாகஞ் செய்துகொண்டு வீட்டிலிருந்தே தென்புலத்தார் தெய்வம் விருந்தினர் முதலானோர்களை யோம்புகின்றவர் மெய்வருந்தாது தமது பொருள்களால் தருமார்த்த காமமென்கிற மூன்றுபுருஷார்த்தங்களையு மடைகின்றார்கள். ஆதலாலில்லறத்திலிருக்கின்றவர்களே! யேனைய ஆச்சிரமிகளினுஞ் சிறந்தவர்களாகின்றார்கள். அன்றியும் தங்களைப்போன்ற மகான்களாயுள்ளவர்கள் முறையாக இல்லறம் பூண்டு அதற்குரிய நல்லறங்களின் வழுவாதொழுகி யுலகத்திலுள்ளவர்களை நல்வழிப்படுத்தாவிடின் அவ்வறத்திற்குந்தான் என்ன சிறப்பிருக்கின்றது. எல்லா முணர்ந்த தங்கட்கு யானின்னும் விசேஷமாய்த் தெரிவித்துக்கொள்வது யாதிருக்கின்றதென்றனன். இதைக்கேட்டதும் சிவன்; ஓ பிராமணா! சொல்லுகிறேன் கேளும். இல்லறமென்பது, நற்குலத்திற் பிறந்து நற்குணங்களுமமைந்துள்ள மனதிற்கிசைந்த வொரு கன்னிகையை யொருவன் மணந்தா லொருவாறு சரியாய் நடைபெறும். அதுவுமெளிதன்று; ஆகையாலெனக்கு விவாகமெதற்காக, யானோ வதேனும் சாமானியமானதொரு குலத்தில் ஜனித்த கன்னிகையை மணந்து கொள்ளேனென்று சொல்ல, அப்பேராசையுள்ள புரோகிதன், மாதவன்பொருள்களை யொருவாறு சுகமாயநுபவிக்கலாமென்ற வெண்ணத்துடனிதுதான்சமயமென்றுகருதிச் சிவனைநோக்கிச்சுவாமீ! தாங்களெவற்றிற்கும் யோசிக்கவேண்டியதில்லை. அதிரூபவதியாய் நற்குணங்களமைந்துள்ள வினயஸ்வாமினி யென்னும் பெயரையுடைய வொருகன்னிகை எனக்குஇருக்கின்றாள்; அவளைத்தங்களுக்கேமணஞ் செய்துகொடுக்கின்றேன். அன்றியும் மாதவப்பிரபுவிடத்தில் தாங்கள் தானம்வாங்கும் தனம்முழுவதும் யானே காப்பாற்றித் தருகின்றேன்; ஆதலாலில்லறத்தைக் கைப்பற்றவேண்டுமென்றனன்.

இதனைக்கேட்டதும் சிவன் நமதெண்ணத்தின்படி நிறைவேறிற் றென்று கருதிப்புரோகிதனைப்பார்த்து ஓ பிராமணரே! இப்படித் தான் செய்யவேண்டுமென்றுமக்கு ஒருதலையான அபிப்பிராயமிருந் தாலுமது சொற்படி செய்கின்றேன். ஆனால் யானேதபஸ்வீ. இரத் தினம் சுவர்ணமிவற்றின் ஸ்வரூபமின்னதென்று யாதொன்றுமறிந் திலேன். உமதுசொற்களைநம்பித்தான் இதிற்பிரவிருத்திக்கின்றேன். உம்முடைய அறிவிற்குத்தக்கபடி யோசித்துக்கொண்டு செய்யுமென் றனன். இவ்விதம் சிவன் கூறியதைக்கேட்டு மூடனான புரோகிதன் சந்தோஷத்துடனப்படியே செய்கிறேனென்று சிவனென்னும் மங்க ளப்பெயருடன் கூடி அமங்களத்தைப்புரிகின்ற அவனைத்தன்வீட் டிற் கழைத்துச்சென்று ஓரிடத்திலிருக்கச்செய்துவிட்டு மாதவனி டம்வந்து தான்சிவனையழைத்துவந்திருக்கும் விவரத்தைத்தெரிவி க்க அவனுஞ்சந்தோஷித்தான். உடனே புரோகிதன் தன்வருத் தத்தினால் விருத்திசெய்யப்பட்டும் மூடத்தன்மையால் பறிகொடுக்கப் படும் சம்பத்தைப்போலவே தனதுபுதல்வியைச் சிவனுக்குக்கொடுத் தனன். பின்பு விவாகமானதும் மூன்றுவதுதினம் மணக்கோலத் துடனிருக்கின்ற சிவனைத்தானம்வாங்குவதற்காகப் புரோகிதன், கப டத்தால் நோயுற்றிருக்கும் மாதவன் சமீபத்திற்கழைத்துச்செல்ல வும் படுத்திருந்த மாதவன் சிவனைக்கண்டவுடன் விரைவிலெழுந்து கைகளைக்குவித்துத் தலைமீது வைத்துக்கொண்டு, எண்ணுதற்கரிய தவத்தினையுடைய வுண்மைப்பொருளே! நமஸ்கரிக்கின்றேனும்மை யென்றுசொல்லிச் சிவனுடைய கால்களில் வீழ்ந்தனன். அச்சமயத் தில் கிருத்திரிமமான மாணிக்கக்கற்களாற்செய்த மிகுந்தஆபரணங்க ளடங்கியபெட்டியைப் பொக்கிஷத்தினின்றுமொருவன் கொண்டுவர அதனைவிதிப்படி மாதவன் சிவனுக்குத்தானஞ்செய்தான்.

(இன்னும் வரும்.)

---

## பிழை திருத்தம்.

"செந்தமிழ்" எ-ம் தொகுதி, கூ-ம் பகுதி, சகூக-ம் பக்கத்தில் தகூ-ம் வரியில், 'வேலைக்காரனை' என்பதை 'வேலைக்காரிகளை' எனவும் ௯டி தொகுதி ௧௦-ம் பகுதி ௩௧௩-ம் பக்கத்தில் ௩-ம் வரியில், 'அன் னத்தில்' என்பதை 'அன்னத்தினால்' எனவுந் திருத்திக்கொள்க.

உ

கடவுள் துணை.

# ஒருவேண்டுகோள்.

ஈண்டுபல் வளனும் வேண்டுத லொரீஇ
வேண்டினர்க் குதவு மாண்டநன் னலத்துப்
பாண்டிய நாட்டிற் காண்டகு சிறப்பி
னீண்டுவிண் ணவரூர் தாண்டி மேற்புகும்
பூமலர்ப் பொழிலும் பொய்கையும் பண்ணையுந்
தேமுறப் பொழிதலிற் றெருவெலாம் வழுக்கும்
பாலவ நத்தப் பதிக்கர சாகிச்
சீலமும் புகழுந் தினந்தொறும் வளர்ப்போ
யிருவிதி யொருவடி வெய்தியங் குற்றென
மருவுபே ராளன் வருந்தமிழ்ப் புலவர்
கரந்தலைக் கூப்புங் கல்விக் களஞ்சிய
நிரந்தர மொழிவின் றிந்நிலத் துள்ளோன்
பொன்னுச் சாமிப் பூபதி தவத்தா
லிந்நிலத் துதித்த மன்னவர் திலக!
வந்தண ராசா ரிரியர்க் கன்றி
முந்துறீஇ வணங்கா முடியுடைக் கொற்றவ!
வளியெலாங் குடிகொள வம்போருகம் போற்
களிமிக விளக்குங் கருணைக் கண்ண!
தென்னவர் வளர்க்க மன்னிய தென்றமி
ழுக்கிய ராசாற் றன்னலங் குறைதி
யொழியுமென் றலகோ ருறுங்கவ லொழித்துக்
கழிபெருஞ் சிறப்புக் கண்டுளங் களிப்பத்
தண்டமிழ்ச் சங்கந் தன்னைமுன் னிறீஇ
மண்டுபல் புலவரை வம்மென வேற்றுக்
கொண்டுநன் றூற்றுங் குணப்பெருங் குன்றே
வேண்டிற் றெவர்க்கும் விரைந்தினி துதவும்
பாண்டித் துரையெனும் பாவலர் கோவே!
நவலரும் புலவர்சொற் றழைக்குநின் செவிக்கண்
ணவிலுமென் மாற்றமு நயந்து கேண்மதி
நந்தமிழ்ச் சங்க நாலிரண் டாண்டு

வந்தழி யான்புகல் வாழ்த்துப் பாவை
யுரையுடன் நீட்டி யுதனுட னுய்த்தனன்
வரைவதற் குரியதா மற்றிதென் றெள்ளா
தெந்த நாவலரு மேற்றுளங் களிக்குஞ்
செந்தமி ழகத்துச் சேர்த்திட லொன்று
மற்றவ் வவைக்கண்யான் வந்தாங் கேற்றப்
பெற்றதா மீகையிற் பேசிய வனைத்துங்
குற்றமின் ருகக் குவலயங் கொள்ளக்
கற்றவர் தொழுநின் கருத்திணுக் கேற்ப
வுற்றதோர் முகவுரை யுவப்புடன் பொறித்துத்
தந்திட லொன்றெனத் தகுவ மிரண்டு.
மிந்நாள் விரும்பினே னெவர்க்குமேற் ருங்கே
யெல்லா முதவ வல்லா ருன்னை
யல்லா தெவரு மில்லா ராதலிற்
றண்ணளி புரிந்து தமியே
னுண்ணிறை யுவகை யுறப்புரி வாயே.

இங்ஙனம்,

எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தர்.

---

## *வாழ்த்துக்கவி.

கேளாரு மகிழ்ந்துபுகழ் சொல்வலியன் பீகைமுதற் கெழுமக் கொண்ட
வேளாக வருபாண்டித் துரையேநின் சொல்வலியின் வியன்மாண் பைப்பன்
ஞளாகக் கருதினன்பாண் டிருத்துமொழி நயத்தாலிந் நாமம் பெற்ருய்
வாளாசொற் றிடுவதென்னே தமிழ்ச்சங்கத் துடனூழி வாழி வாழி.

(இதன்பொருள்.) கேளாரும் - பகைவரும், மகிழ்ந்துபுகழ் - வியந்து துதிக்கின்ற, சொல்வலி அன்பு ஈகை முதற்கெழுமக் கொண்ட - சொல்லாற்றல் அன்புடைமை கொடை முதலிய நற்

---

* மதுரைத் தமிழ்ச்சங்க எட்டாம் வருடோற்சவத்தன்று, சோதுகுடி எம். கே. எம். அப்துல் காதிறு ராவுத்தரவர்களால் சங்க அக்கிராசனுதிபதி யவர்கள் மீது கூறப்பெற்ற வாழ்த்துக்கவி.

குணங்கள் பலவற்றையும் விளக்கமுற அமைந்த; வேளாகவரு-- மதனையொப்பத் தோன்றிய, பாண்டித்துரையே—, நின்சொல்வலியின் - நினது சொல்லாற்றலின், வியன்மாண்பை - பெரியமாட்சியை, பன்னாளாகக் கருதினன் - பல தினங்களாக (யான்) சிந்தித்தேன், பாண் திருத்து மொழி நயத்தால் - பண்ணினையும் திருந்தப்புரிகின்ற சொல் லின்பமுற்றிருத்தலால், இ நாமம் பெற்றாய் - (பாண்டித் துரை)யென்னும் அப்பெயரினைப் பெற்றனை. என்னா சொற்றிடுவதென்னே - இங்ஙனம் நின் பெயரே நின் சொல்வலியை விளக்கி நிற்பதாகவும் யான் வீணாக (ப் பலபடக்) கூறிடுவதி லென்னபயன்? தமிழ்ச்சங்கத்துடன்.— ஊழி வாழி வாழி - ஊழிக்காலத்தளவும் வாழ்வாயாக வாழ்வாயாக. (எ - று.)

குறிப்பு:—உம்மை உயர்வு சிறப்பு. ஏகாரம் முன்னது விளிப் பொருளது. பின்னது அசைநிலை. பாண் - உம்மை விகாரத்தாற் றொக்கது. அடுக்கு, உவகைப் பொருளது. திருத்து என்பது திருந்து என மருவியதாகக் கொள்ளப்பட்டது.

விசேடவுரை:—"கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்-வேட்ப மொழிவதாஞ்சொல்" என்பவாகலின் கேளாரு மகிழ்ந்து புகழ்சொல், எனவும் "சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை - வெல்லுஞ்சொ லின்மை யறிந்து" என்பவாகலின் சொல்வலி எனவும் உண்ணிறைந்த பேரன்புடையார் மாட்டன்றி இன்சொற் பிறவாமையும், இன்சொலா னன்றி யிருநீர் வியனுலகம் வன்சொலால் மகிழாமையும், சிறந்த சொல்லேயாயினும் உலகமகிழ்ந்து கோடற்கியையாத வழிப்பயனற்றதாகு மென்பதையும் நோக்கிச் சொல்வலியையடுக்க அன்பு என்பதை வைத்தும், பேசுந்திறனும் அன்பும் பெற்றக்காலும் இவறன்மையுடையார்க்குப் புகழிலதாதலும் அன்பின்பயனே ஈதலாதலும் நோக்கி அன்பு என்பதையடுக்க ஈகை என்பதை வைத்தும், இன்னோரன்ன நலம்பல நிரம்பப் பெறுதலை விளக்குவான் முதற்கெழுமக்கொண்ட என்ற சொற்களைத் தந்தும், இவ்வெல்லா நலங்களையும் பெற்றவழியும் முகவசீகரமான வடிவழகு வாய்ப்பப் பெறுவிடில் காட்சியின்பம் பயவாமையும் அழகின் அளவுக்கேற்பவே குணமும் அமையுமெனக் கொண்டு "நல்லெழில்

பகருமுன் னூலோர் - இலங்கெழி லளவு குணமென விசைப்பர்" எனவும், "உருவின் மிக்கதோ ருடம்பது பெறுதலு மரிதே" எனவும் முன்னோர் கூறுதலால் வடிவழகும் அவசியம் வேண்டப்படுவ தொன்றாதலும் நோக்கி வேளாக வருபாண்டித் துரையே என விசேடித்தும் கூறியவாறும்.

பிறன் கூற்றைத் தன் கூற்றாகத் தோற்றுவித்துப் பொய்ப்புகழ் பூணும் கள்ளக்கவிகள்போலாகி அடிப்பட்ட சான்றோரியற்றியருளிய முறைப்பட்ட நூல்கள் பலவற்றையும் நல்லாசிரியன்பாற்கற்று நுண்மாணுழைபுலம் பெற்றுவிளங்கும் தன்னியற்கை மதிநுட்பத்தாலறிந்தவிட்யங்களை யவையஞ்சாது கூறுதற்சிறப்பை விளக்குவான் நின்சொல் வலியின் எனவும்,

உலகநூல்களைக் கற்றுப்பாராட்டிக் கல கல கூஉந்துணையான வெற்றுரை பரப்பும் போலிப் புலவர்களது பயனில் சொற்போலாது அலகு சால் கற்பின் அறிவுநூல் பலவுங்கற்றுக் கேட்பவருள்ளம் வேட்புறப் பிணிக்கும் பெற்றிமைவாய்ப்பக் குன்றக் கூறலாதிய குற்றமொழித்துச் சுருங்கச் சொல்லலாதிய அணிநலஞ் சிறப்ப உயிர்க்குறுதி யுதவும் அறத்தின் வழியமையக் கூறும் பொருட்சிறப்பின் பெருமைமிகச் சிறந்ததொன்றும், என்பதை விளக்குவான் வியன்மாண்பை எனக் கூறியவாறும்.

எடுத்த விடயத்திற்கு ஏற்றமொழிகளைப் பன்னாட்டேடிப் பலகாற்சிந்தித்து வைத்த முயற்சி வலியானே குருட்டுப்பூனை விட்டத்திற் பாய்ந்தாற்ற தொப்ப ஓர் கால் ஒருவிடயத்தை யெடுத்து நன்கு பேசிமுடித்து மகிழும் பாலப்புலவர் போலாது அரியபெரிய விடயங்கள் பலவும் அவ்வவற்றின் பாகுபாடுகளுடன் உள்ளத்தின் கண்ணே நிறைவுற்றிருப்பக்கொண்டு எச்சமையத்திலும் எவ்விடயத்தைப்பற்றிப் பேசவேண்டினும் அவ்வப்போது சொற்சுவையும் பொருட்சுவையும் வரவரப்பெருகிப் பரவப் பலகாலத்தில் பல விஷயங்களைப் பலகாற் பிரசங்கிக்கும் நிறைபெரும் புலமைத் திறத்தை விளக்குவான் பன்னாளாகக் கருதினன் எனக்கூறியவாறும். இங்ஙனங் கோடலன்றியும் உற்றுநோக்கி யாராயாது விரைந்து கூறுங்

கருத்துக்கள் பின்னர் மாறுபடுதல் கூடுமாதலின் யான் அவ்வாறு கூறுகிற்றிலன். நெடிது சூழ்ந்து திறப்படுத்திய கருத்து இதுவாம் எனத் தேற்றுவிப்பான் பன்னாளாகக் கருதினன் எனக்கூறியதாகக் கொள்ளலும் பொருந்தும்.

"விரைந்து தொழில்கேட்கு ஞாலநிரந் தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்."

என்பவாகலின் யார்யார் எவ்வெவற்றைக் கூறினும் இனிய மொழிகளாற் சொல்லினன்றிப் பயன்படாமையால் செவிக்கின்பந் தந்து மனத்தைக் குளிர்விக்குந் தன்மையுற்றுப் பண்டிதபாமரரஞ்சிதமாக விளங்கும் சொற்களாதலின் அத்தகையபண்ணினையும் செவ்விதாக்கும் சொல் நயம் எனப்பொருள் தரக்கருதி பாண்டிருத்து மொழிநயம் எனக்கூறியவாறும். பாண்டித்துரை எனற்கு வேறு பொருளிருப்பவும் பாண்டித்து (திருத்து) உரை எனப்பொருள் கொண்ட தன் குறிப்பையேற்றிக் கூறுதலை விளக்குவான் இந்நாமம் பெற்றாய் எனக்கூறியவாறும். இத்தகைய இன்சொல்லாற்றல் மிக்க நினது அவைக்கண்யான் எனது புன்மொழிகளால் வீண்படக்கூறுதலிற் பயனில்லையே யெனவும், நின்பெயர்க்கு இங்ஙனம் சிறந்த பொருளிருப்ப இதனையுற்றறியாது வாளா கூறுதல் வியையாதெனவும், ஒன்றைச்சொல்லப் புகுவார் நின்னைப் போலிவ்வாறு சிறப்பக் கூறாது வாளாகூறுதலால் யாதுபயனோவெனவும் விளக்குவான் வாளா சொற்றிடுவதென்னே எனக்கூறியவாறும். இப் பாட்டுடைத்தலைவர் தமதுடல் பொருளாவிகளினும் இம் மதுரைத் தமிழ்ச்சங்கத்தையே மிக்குமதித்துப் போற்றிவருதலானும், கவியின் கருத்துக்கும் அஃது ஒப்பமுடிந்த தொன்றாகலானும் தமிழ்ச்சங்கத்துடன் எனவும், மானுடப்பிறவிக்குரியது சில்வாழ் நாளாதலின் இறைவனதருளால் பல்லூழிகாலம் வாழ்ந்திருக்கவேண்டு மென்பதைப் புலப்படுத்துவான் ஊழி வாழி வாழி எனவும் கூறியவாறும்.

இனி கேளாரும் என்பதை கேள்வி + ஆரும் எனக்கண்ணழித்துக் கேள்வியுற்ற யாவரும் எனக்கொண்டு கூட்டியுரைப்பினுமமையும். கேள் - வினைத்தொகை. உம் - முற்றுப்பொருளது. அன்றியும்,

கேளாருமகிழ்ந்து புகழ்சொல்வலியன்பீகை - என்பதில் சொல்வலியன்பீகை என்பதை சொல் வலி அன்பு ஈகை எனப்பிரித்து, கேளாருமகிழ்ந்து புகழ் என்பதைச் சொல் முதலிய நான்குடனுங்கூட்டி, கேளாருமகிழ்ந்து புகழ்சொல், கேளாருமகிழ்ந்து புகழ்வலி, கேளாருமகிழ்ந்து புகழ் அன்பு, கேளாருமகிழ்ந்து புகழீகை எனக்கொண்டு கூட்டி நேரிற்கேள்வியுறுதவரும் வியந்து துதிக்குஞ்சொல் எனவும் பகைவரும் வியந்து துதிக்கும் வலி எனவும், (கேளார்—பகைவர்) சுற்றத்தாரும் வியந்து புகழ் அன்பு எனவும், ஒன்றையிரந்து கேளாரும் வியந்து புகழீகை எனவும் முறையே பொருள்கூறுதலும் ஒன்று. மேல், கேளாருமகிழ்ந்துபுகழ்வலி எனற்குப்பகைவரும் வியந்து துதிக்கும் வலியென்றதில், பகைவர் துதிக்கும் வலியாவது இராமன் வலியை இராவணன் வியந்து கூறியாங்குக் கூறப்பெறுவதோர் வலிமை. அதனை,

"வரிசிலை நாணிற் கோத்து வாங்கினன் விடுதலொன்றுந்
தெரிகில தமர்த ஞற்றல் யாரவன் செய்கை தேர்வார்
பொரிசினத் தரக்க ராவி போகிய போக வென்று
கருதிய வுலக மெல்லாஞ் சரங்களாய்க் காட்டு மன்றே."

என்னும் கல்வியிற்பெரியோர் கூறிய இராமாயணச் செய்யுளானும் பிறகவிகளானும் நன்கு தேறலாம். இன்னும் விரிப்பின வரம்பின்றிப் பெருகுமாதலின் இவ்வளவிற் சுருக்கிமுடித்தாம்.

இங்ஙனம்,

சோதகுடி,

எம். கே. எம். அப்துல்காதிறுராவுத்தர்,

யூனியன் சேர்மென்,

இளையான்குடி.

---

## பிழைதிருத்தம்.

சென்ற ஆவணிமாதச் "செந்தமிழிலே" (தொகுதி எ. பகுதி கo)ல், தோற்றிய "ஆங்கிலமொழிக்கலப்பு" என்னும் விஷயத்திலே, பின்வரும் திருத்தங்களைச்செய்து வாசிக்க.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| சகo | உக | கண்காட்டல் | ———— |
| சகஃ | கக | கண்முதலிடவற்ருல் | கன்முதலியவற்ருல் |
| சகரு | க | பிழையாக | சொற்கள் பிழையாக. |

*

உ

திருச்சிற்றம்பலம்.



# குதிரையைப்பற்றிய ஆராய்ச்சி.

இது பிரமாவின் நாவிலும், அவன் விழிநீரிலும், இந்திரன்முதலிய அட்டதிக்குப் பாலர்களிடத்திலுங், கடலமிர்தத்திலும், அக்கினியிலுங், கருப்பையிலுங், கோட்டான்முட்டையிலும் ஆகிய இவ்வேழிடத்தினுந் தோன்றுமென்பர். திருவாதவூரடிகள் புராணம், குதிரையிட்ட சருக்கத்தில், "மிக்கசெழுமறைநாவிற் கமலநாதன்விழிப்புனலில் விண்ணோர்களெண்மர்தம்பான், மைக்கடன் மேலமிர்தத்தினங்கி மீதின்மல்குகருப்பையிலுலுகவண்டந்தன்னிற், றொக்கவெழுபேதமெனு மிவற்றிற்றோன்றும்" எனக்கூறிய, ௬௦-ஆஞ்செய்யுளிற் காண்க. இச்செய்யுளுரையில், மறைநா என்பதற்குப் பிரமன் சாமவேதங்கூறுநா வென்றும், விழிப்புனல் என்பதற்கு யாகஞ்செய்யும் போது அப்பிரமன் கண்ணினின்றுமொழுகிய நீரென்றும், அங்கி என்பதற்கு அவன்செய்யும யாகாக்கினி என்றும், உலூகவண்டமென்பதற்கு இலக்குமிசாபத்தாற்கோட்டான் வடிவமைந்த பிரமனிட்ட முட்டையென்றுங் கூறினர். இக்கருத்துப்பற்றிக் கல்லாடம், ௬௬-ஆவது அகவலில், * "ஏழிடந்தோன்றியினனூற்கியைந்து" எனக் கூறினர்.

---

* இதனுரையில், ஏழிடந்தோன்றியென்பதற்கு ஏழிடமுயர்ந்தெனப் பொருளுரைத்தார். அவ்வேழிடத்தின் வகையுமுரைத்திலர்.

இது, சுற்றும் நீளமும் உயரமுமொத்திருப்பதாய், உயர்ந்தசுழியுடையதாய், உயர்ந்த நிறமுடையதாய், அழகுடைய அவயவத்ததாய், முரசு சங்கமென்னுங் குரலுடையதாய், ஐங்கதியுடையதாய்ப், பாகர் மனத்தாற்குறிப்பதையும் வார்த்தையாற் குறிப்பதையுங் கையாற்குறிப்பதையும் ஆசனத்திருப்பாற்குறிப்பதையுங் காலாற்குறிப்பதையும் அறிந்துகொள்வதாய், இலக்கணங்களிற் குறைவில்லாததாய், யாளி யானை முதலியவற்றின் கதியுடையதாயிருப்பதென்பர். மகாபாரதம்; சூதுபோர்ச்சருக்கத்தில்,—

"சுற்று நீளமு முயரமு நிகர்ப்பன சுழியின் மிக் கனதீமை
யற்று மேதகு நிறத்தன கவினுடை யவயவத் தனவாகி
யெற்று மாமணி முரசமுஞ் சங்கமு மெனுங்குரன் மிகுத்திப்பார்
முற்று மாதிரத் தளவுமைங் கதியினுன் முடிப்பன விமைப்போதில்."

"ஆளி னெஞ்சமும் வார்த்தையுஞ் செங்கையு மாசனத் தொடுதாளுங்
கோளி னின்புறக் குறிப்பன வெவற்றினுங் குறைகளற் றனவாகி
யாளி குஞ்சரம் வானர முதலிய வியக்கினுல் விசும்பெங்குந்
தூளி கொண்டிட மிடைந்தவந் தனநெடுந் துரகதம் பலகோடி."

எனக்கூறிய அக, அஉ-ஆஞ் செய்யுளிற்காண்க. முற்கவியிற்கூறிய ஐங்கதியாவன:—மல்லகதி, மயூரகதி, வானரகதி, வியாக்கிரகதி, இடபகதியென்பன; சூடாமணிநிகண்டு, பன்னிரண்டாவதில்,—

"மல்லொடு மயூர மற்றை வானரம் வல்லி யங்கள்
சொல்லுமால் விடைக ளென்ப துரகத கதிக ளைந்தாம்."

எனக்கூறிய, சக-ஆஞ்செய்யுளிற்காண்க. இவ்வைங்கதியிற்சிலவேறுபடவுங் கூறுவர். காஞ்சிப்புராணம், நகரப்படலத்தில்,—

"மல்லலை மயில்களை வான ரங்களைப்
புல்லிய முயல்களைப் பொருச ரங்களை
வல்லவா புறக்கொடை கண்ட வான்கதிப்
பல்லியற் புரவியின் பந்தி யாயிரம்."

எனக்கூறிய கஅ-ஆஞ் செய்யுளிற்காண்க. சீவகசிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகத்தில்,

"விக்கிதம் வற்கிதம் வெல்லு முபகண்ட
மத்திமஞ் சாரியோ டைந்து."

எனக்கூறிய உ௬உ-ஆங் கவியுரையிற்காண்க. இவ்வைந்திற்கும் பொருளுரைத்திலர். பிற்கவியில், யாளி குஞ்சரம் வானர முதலியகதியைக் கூறலால் நவகதியுமுண்டென்பதனைக் குறித்தாரெனக் கொள்ளல்வேண்டும். மகாபாரதம்; பதினான்காம்போர்ச்சருக்கத்தில்,—"நவகதிக்குரகதக்குலம் யாவும்" எனக்கூறிய, ௭௭-ஆவது கவியிற் காண்க. நவகதியாவன; பின்னர்க்காண்க.

நல்லிலக்கணமுள்ள குதிரை ஒருவனிடத்திலிருந்தால் அவனிடத்தில் இலக்குமிதங்குவள், செல்வமுங்கீர்த்தியும் வளரும் என்பர்

"பொருவில்சீ ரிலக்கணப் புரவி யொன்றுதா
னொருவன திடைவதிந் துறையி னல்லெனா
மருவுறுந் திருமகண் மல்லற் செல்வமும்
பெருகுறுங் கீர்த்திகள் பல்கும் பெற்றியால்."

எனக்கூறிய திருவிளையாடற்புராணம், நரிபரியாக்கியபடலம் ௮௭-ஆவது செய்யுளிற் காண்க.

மாந்தளிர் நிறமுள்ள நாவினதாய்க், குளம்புயர்ந்ததாய், நீண்டு தம்முளொத்த பற்களையுடையதாய், மார்புங்கண்டமும் பாம்பின் படம்போ லுள்ளதாய்;

அகன்றநெற்றியையுடையதாய்த், தலைமயிரைப்போலக்கொய்த, பிடர்மயிரும் ஒரே நிறமுள்ளதாய், மூக்கோணமுள்ள அழகுமிகுந்த முகத்தையுடையதாய்;

போரிலே முகத்தில்வாளினால் வெட்டினாலு மெதிர்ப்பதாய்க், குரங்கு, புலி, யானை, நாய், ஆடு, நரி, சிங்கம், சரபபக்ஷி, முயல் ஆகிய இவ்வொன்பதின் கதியையுடையதாய்;

உயரத்தளவுநீளமுடையதாய்ச், சங்கைப்போலவும் வெண்கருமுகிலைப்போலவும்நிறமுள்ள நுரையைக்கக்குவதாய்த், தனித்தனி ஒவ்வொரு நிறமுமுள்ளதாய், ஐவகை நிறமுங்கலந்துள்ளதாய்;

கழுத்திற்*றெய்வமணியுள்ளதாய்,†அட்டமங்கலத்தையுடையதாய், ‡பஞ்சகல்யாணமுள்ளதாய்;

குங்குமங்கருப்பூரம்அகில்கஸ்தூரிபோலப்பரிமளமுள்ளதாய்ச், சங்கமும் மேகமுஞ் சாபமுஞ் சிங்கமும்போல ஒலிப்பதாய்;

கடைந்தெடுத்துச்சேர்த்ததுபோலநாலுகால்களுமுடையதாய், கொள்ளிவட்டத்தைப்போலச் சுழன்றுவருவதாய், மேலிருந் தசேவகன் காலினுளடங்குவதாயிருப்பதென்பர்; திருவிளையாடற்புராணம், நரிபரியாக்கிய படலத்தில்,—

"நெய்த்திடு மாந்தளிர் நிறத்தநாவின
வைத்திடு குளம்புச ளுயர்ந்த வார்ந்துநே
ரொத்திடு மெயிற்றின வுரமுங் கண்டமும்
பைத்திடு மராப்படம் போன்ற பாடலம்"
"அகலிய நுதலின வாய்ந்த குஞ்சிபோ
னிகரறு கொய்யுளை நிறமொன் றுயின
புகரறு கோணமூன் றுகிப் பொற்புறு
முகமுடை யனவய மொய்கொள் கோடகம்."
"முட்டிய சமரிடை முகத்தில் வாளினல்
வெட்டினு மெதிர்ப்பதாய்க் குரங்கு வேங்கைதோல்
*பட்டிமை நரியரி சரபம் பாய்முய
லெட்டிய கதியின விவுளி யென்பவே."

"உன்னத நீளமுண் டாகிச் சங்குவெண்
கன்னலின் வாலிய விலாழி கால்வதாய்ப்
பின்னமா கியதனி வன்னம் பெற்றமை
வன்னமு முடையது வன்னி யாவதே."

---

* தெய்வமணி, † அட்டமங்கலம், ‡ பஞ்சகல்யாணம் இம்மூன்றையும் பின்னர்க்காண்க.

* பட்டிமை என்பதற்கு, உரைப்பிரதியில் வஞ்சமெனப்பொருள் காணப்படுகின்றது; அங்ஙனம் பொருள் கொள்ளில், ஒன்பது கதிக்கு இரண்டு கதியில்லை. அக்கவியில் ஒன்பதுகதியுங்கூறியதாகவே ஆன்றோருரைக்கின்றார். பட்டியென்பதற்குப் பிங்கலநிகண்டு பத்தாவதில் நாயெனப்பொருள் கூறுதல் காண்க. மலையாளத்திலும் பட்டி நாயென்பது பெருவழக்கம்.

தோல் - யானை. மை - ஆடு.

"இணிதரு கழுத்தினிற் சிறந்த தெய்வத
மணியுள தாகியெண் மங்க லத்தா
யணிதரு பஞ்சகல் யாண முள்ள தாய்க்
குணிதரு நீரது குதிரை யாவதே."
"குங்குமங் கருப்புரங் கொழுந்திண் காரகிற்
பங்கமான் மதமெனக் கமழும் பாலதாய்ச்
சங்கமு மேகமுஞ் சாப முங்கொடுஞ்
சிங்கமும் போலொலி செய்வ தாம்பரி."
"நாலுகால் களுங்கடைந் தெடுத்து நாட்டினாற்
போல்வதாய்க் கொட்புறும் போது சுற்றுநீக்
கோலையொப் பாகிமேற் கொண்ட சேவகன்
காலினு ளடங்குவ தாகுங் கந்துகம்."

எனக்கூறிய, அஅ-ஆவது செய்யுண்முதல், கூச-ஆவதுசெய்யுள் வரையுங் காண்க. இவை பொதுவிலக்கணமென்பர். இனிச்சிறப்பிலக்கணம் வருமாறு:—

வெள்ளியையும் முத்தையும் பாலையுஞ் சந்திரனையுஞ் சங்கையும் பனியையும்போல நிறம்வாய்ந்த குதிரை வெள்ளைக்குதிரை, மாதுளம்பூவையுஞ் செம்பஞ்சுக்குளம்பையும் போலச் செந்நிறத்தையுடைய குதிரை செங்குதிரை, கருமையுங் குயிலும் வண்டும் கார்மேகமும் போலக் கருநிறத்தையுடைய குதிரை கருங்குதிரை, நெருப்புங் கோரோசனையும் போல நிறம்வாய்ந்த குதிரை பொன்னிறக்குதிரை என்றும்;

மேற்கூறிய வெண்மை முதலிய நான்கு நிறமுங் கலந்த குதிரைக்கு மிச்சிரமென்றுபெயர், முகமும் மார்பும் உச்சியும் வாலும் நான்கு காலுமாகிய எட்டுறுப்பினும் வெண்ணிறமுள்ள குதிரைக்கு அட்டமங்கலமென்றுபெயர், உச்சியும் நான்குகால்களுமாகிய ஐந்துறுப்புக்களிலும் வெண்மையுள்ள குதிரைக்குப்பஞ்சகல்யாணியென்று பெயர் என்றும்;

கண்டத்தில் வலமாகச்சுழித்திருந்தால் அந்தச்சுழிக்குத் தெய்வமணி யென்றுபெயர், முகம் தலை நாசி மார்பு என்னும் நான்குறுப்புக்களிலும் இரண்டிரண்டாகச்சொல்லப்பட்ட சுழிகளும் நெற்றி நடு

விலும் பின்பக்கத்திலும் ஒவ்வொரு சுழியும் உடைய குதிரை இலக்கணங்களையுடைய குதிரை இச்சுழிகளில்லாத குதிரை இலக்கண வழுவுடைய குதிரையென்றும்;

மார்பில் ஒன்றோடொன்று கலவாமல் ஐந்து சுழிகளையுடைய குதிரைக்கு சிரீவற்சமென்றும் பெயர். நெற்றியில் இரண்டு சுழியாயினும் மூன்றுசுழியாயினும் இருந்தால் நல்லது, அன்றேல்நான்கு சுழி வலம்புரியாய் உள்ளதுநல்லது, அன்றி முன்னங்கால்களினும், மூலத்தினும் இரண்டு சுழிகளிருந்தாலும் நல்லது என்றும்;

கண்டத்தின் நடுவில் இரண்டுசுழியுடைய குதிரை தன் எஜமானுக்கு மிக்கவறுமையையும் மிக்க துன்பத்தையும் உண்டாக்கும், அவ்விரட்டைச்சுழிகள் கணைக்காலினுள்ளனவாகிய குதிரை பயத்தையும் துன்பத்தையும் விலங்குபூணுதலையு முண்டாக்கும், மேலும் தடு முன்னங்காலடி கபோலம் மூளந்தாழாகிய விந்நான்குறுப்புக்களினுஞ் சுழிகளிருந்தால் எஜமானனைக்கொல்லும் என்றும்;

மேற்கூறிய சுழிகளையுடைய குதிரையைக் குதிரைப்பந்தியிற் கட்டியிருப்பினுங் குற்றமாம். இவை நிற்க. குதிரைக்குவயது முப்பத்திரண்டாம், அவத்தைபத்தாம், ஒவ்வோரவத்தைக்கும் மூன்று வருடமும், இரண்டுமாதமும் பன்னிருநாளும் நிச்சயித்து அளவிட்டார் என்றும்;

எந்த நிறத்தின் பேதங்கள் மிகுந்திருந்தாலும், வெள்ளைகலந்திருக்குமானால் அக்குதிரை நன்மையைத் தரும். கருங்குதிரைக்கு வயிற்றிலாயினும் மார்பிலாயினுஞ் செந்நிறமிருந்தால் அது வெற்றியுள்ளது. அவ்விரண்டுறுப்பினும் வெண்ணிறமிருந்தால் அக்கருங்குதிரைக்கு வாருணமென்று பெயர். அது போரில் வெற்றியைத் தரும் என்றும்;

பிடரின் வெளுப்புப் புத்திரப்பேறு தரும், மார்பின் வெளுப்பு மகிழ்ச்சியைத்தரும், கண்டத்தின் வெளுப்புப் பொருளைத் தரும், முகத்தின் வெளுப்பு வெற்றியைத் தரும், பின்பக்கத்தின் வெளுப்புச் சுகத்தைத்தரும், இடப்பால் வெளுப்புச் சந்ததி தழையச்செய்

யுஞ் செல்வத்தை வளர்க்கும், வலப்பால் வெளுப்புத் தனத்தையும் பலதானியங்களையுந் தரும் என்றும்;

முதுகு வால் முகம் ஆகிய மூன்றுறுப்புக்களும் வெளுப்புள்ள குதிரை வெற்றியைக் கொடுக்கும், உந்திதொடங்கி முன்பக்கமெல்லாஞ் சூரியனைப்போலச் செந்நிறம் வாய்ந்து பின்பக்கமெல்லாஞ் சந்திரனைப் போல வெளுத்திருக்குங் குதிரைக்குப் பகற்காலம் விசயம் பெருகச் செய்யும். முன்பக்கமெல்லாஞ் சந்திரனைப்போல வெண்ணிறம் வாய்ந்து, பின்பக்கமெல்லாஞ் சூரியனைப்போல செந்நிறம் வாய்ந்த குதிரைக்கு இராக்காலம் விசயம் பெருகச்செய்யும், என்றும்;

அடியெடுத்து வைத்தாற் பந்தைப் போலவும், நின்றால் மலையைப் போலவும், முழக்கஞ் செய்தாற் சிங்கத்தைப் போலவும், வேகத்தாற் காற்றைப்போலவும், மிதிக்கு நடனத்தால் நாட்டியப் புலவனைப்போலவும், நடந்தாற்சிங்கத்தையும் யானையையும் போலவுந் தன்மையுடையதாகி; குலமாதர்போலக் கவிழ்ந்த முகமுங், கருநெய்தற் பூவையொத்த கண்களும், மேகத்தைப்போலக் கருநிறமும், கருநெய்தற்பூவின் மணம்போல மணமும் பெற்று, மலர்மாலையையும் அகிற் குழம்பையுஞ் சந்தனக்குழம்பையும் மணியாபரணங்களையும், அலங்கரித்தால் மகிழ்ச்சிமிகுந்து விளங்குவது உத்தமவாசியென்று பெயர் என்றும்;

உத்தமசாதிக் குதிரைக்கு உயரம் நூறுவிரலளவாம், மத்திம சாதிக் குதிரைக்கு உயரம் எண்பத்துநான்கு விரலளவாம், அதம சாதிக்குதிரைக்கு உயரம் அறுபத்தொருவிரலளவாம், இக்குதிரைகளை அரசர்பூசித்துக் கயிறுமாறுவார் என்றுங்கூறுவர்.

திருவிளையாடற்புராணம், நரிபரியாக்கிய படலத்தில்,

"வெள்ளிநித் திலம்பால் சந்திரன் சங்கு வெண்பனி போல்வது வெள்ளைத்
துள்ளிய புரவி மாதுளம் போது சுகிர்ந்தசெம் பஞ்சியின் குழம்பிற்
றெள்ளிய நிறத்த செம்பரி மாமை சிறைக்குயில் வண்டொர் முகில்போ
லொள்ளிய கரிய பரியெரி யழலா னுரோசனை நிறத்தபொற் பரியே."

(இன்னும் வரும்.)

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்,
சைவநூற்பரிசோதகர், மதுரைத்தமிழ்ச்சங்கம்.

திருச்சிற்றம்பலம்.

# பெரியபுராண அரும்பத விளக்கம்.

———:o:———

[பழைய ஏட்டினின்று எடுக்கப்பட்டது.]

(முற்றொடர்ச்சி.)

(கரு௫) நீத்தாருந்தொடர்பரிய நெறிநின்றார் - முனிவராலுந் தொடர்தற்கரிய நெறியில் நின்றார்.

(கரு௭) பூமிவியப்பெய்தவரும் நல்லபொன்னில் எடுத்து, மூல மென்றுகொடுபோந்த ஆணியின்முன்னே உரைப்பிக்க.

(கசரு) பொன் புற்கென்றிட - பொன்னும் ஒளிமழுங்க.

(கசஅ) சங்கநிரையோடு பவளக்கொடியையும் மணிக்குவை யையும் முத்தையுங் கடற்றிரை கொண்டு.

(கசு௫) பருகாவின்னமுதத்தை - வாயாற்பருகுதலரிய இனி ய அமுதத்தை.

(கசு௭) கல்லாற்செய்யப்பட்ட மதில் பக்கத்தேசூழ்ந்த.

(கஎக) ஆவியினுமடைவுடையார் - ஆன்மாவினுஞ்சிறப்புடை யார்.

(கஎரு) சுத்தமாகியநதிகளில் வண்டொலிக்கும்பொலிவாகிய முல்லை, குறிஞ்சி வளஞ்செறிந்தமருதம் ஆகிய இவை பலவற்றைக் கடந்து.

(கஎச) பாஙடும் - பாக்களுள்ஆராயப்படும்.

(கஎசு) குறுகாமையால் மிகுந்தபசிவருத்தத்தால்.

(கஎஎ) மலையின்மேல்மருந்தானார் - திருக்கழுக்குன்றத்தினி ருக்கின்ற அருமருந்துபோல்வார்.

*

(கஎகூ) கடும்பகற்போதிடும்பலிக்கு - மத்தியானத்திலிடும்ப லிக்காக.

(கஅஉ) வன்றொண்டர் சிவயோகியார்மறைய.

(கஅகூ) தெற்றியாடன்முழவதிர - சித்திரகூடங்களில் நடன முழவொலிக்க.

(கஅகூ) சிவனுக்கு மோசம்வருமோ என்று பயந்து.

(ககூஉ) காணமோடுபொன்வேண்டி - பொற்காசோடு பொன் னைவேண்டி. நெய்யும்பாலும் கலைவிளங்கும்-நெய்யும்பாலுமெனக்கலை நூலில்விளங்கும்.

(ககூகூ) வடதிசையிலுள்ள ஸ்ரீபருப்பதமும் திருக்கேதாரம லையும் முதலாக இடமாகச்சிவபெருமான் மகிழ்ந்தஸ்தலங்களையெல் லாம்.

(உ0க) ஆதிபுரி - திருவொற்றியூர்.

(உ0ரு) ஏட்டுவரியில் - "திருவொற்றியூர் நீங்கலாக" என்று எழுத அறியும் கண்மலரும் அழகியநெற்றியையுடைய சிவபிரானது வர்சனைபொருந்திய தாமரைமலர்போன்ற சிவந்தபாதங்களில்.

(உ0அ) பழைய அகிந்திதையானவர் வேளாளகுலத்தில் மிகு ந்த நன்மையுடையோர் வாழுகின்ற ஞாயிறு என்னுமூரில் மேலாங் கொள்கையையுடைய வேளாண்டொழிலில் மிக்கஅழகிய ஞாயிறு கிழவரிடத்தே.

(உ0கூ) இமயமலையரசன் மகளுடைய தாமரைமலர்போன்ற பாதங்களைமறவாத அன்பினாலே வந்தவழிதலையாம் அறிவு வந்தடை யத் தாமாகவே அவ்வுணர்வைஅறிந்த சங்கிலியாரானவர் கொலைத் தொழில்பொருந்திய வேல்போன்றகண்களையுடைய சிறியபெண்கள் கூட்டத்தோடும்.

(உக0) கச்சும் அழகிய ஆபரணங்களும் அவாவும்வளர்கின்ற மென்மையானமுலைகள்.

(உகக) படிவம் - தன்மை. நிகழுங்காலமென்ன - நிகழுங்காலத்திலென்றாகூறு.

(உகரு) தைவந்ததுநீங்க - தடவுதலாவதுநீங்க.

(உகரு) பந்தம் - தொடர்பு.

(உகசு) தீதங்கிழைத்தேயிறந்தான்போற்செல்ல, விடுத்தாருடன்சென்றார் -தீமையைச்செய்திறந்தான்போல இறக்கவிடுக்கப்பட்டோரும் உடனே இறந்தார்.

(உகஎ) செய்தவிதியைப்போ லதுநிகழ மேலோர்க்குள்ளபடி கூறி.

(உகஅ) வணங்கிச்சிவன்மாட்டுள்ள தன்மையேயன்றி வார்த்தை வேறொன்றறியாள்.

(உகசு) அந்நகரில் தண்ணூர்தடஞ்சூழ் கன்னிமாடத்துத்தங்கிப்புரிவீர் தவமென்று.

(உஉக) கடிசேர்முறைமைக் காப்பியற்றி -- காவல்சேர்ந்த முறைமையையுடைய மதிலையுண்டாக்கி.

(உஉஎ) அன்பாகியநாரிற் சிவனுடையபஞ்சாக்கரத்தை நெஞ்சுதொடுக்கப்பூலைவத்தொடுத்து.

(உஉஅ) துளையாதமுத்தையும் வண்டுகள்வீழாத செழித்தமிருதுவாகிய அரும்பையும்நிகர்த்த புதியவராகிய (கன்னிகை) சங்கிலியாரைச் சிவனடியார்கண்டபோது மனமானது நிறையாற்காவாது அவரிடத்தேபோய்விழ.

(உஉசு) பொன்னும் மணியும் மலர்ந்த ஒளியை அமுதிலளாவிப் பாலசந்திரனிடத்துள்ள நீர்மையினுற் குழைத்து.

(உநக) மின்போன்ற சடையை யுடையார்க்கு அடிமையாம் விதியோடு வாழும், என்னைவருத்திச் சிவனுடைய அருளால் வரும் பேற்றைத்தவத்தா லணையாதபடி தடுத்து என்னுடைய அரிய உயிரையும் அழகிய பூவையும் ஒருசேரப்பிணைக்கும் இவளை.

(உ௩உ) இளைத்தல் - அகழ்தல்.

(உ௩௩) உமையை ஒருபால் மகிழ்ந்ததுமன்றி அழகிய நெடிய முடியில்கங்கையைமறைத்தருளும்விருப்புடையீரே! அடியேனுக்கும் இங்கே திருமாலையைத்தொடுத்து மனக்கட்டுப்பாட்டை அவிழ்த்த.

(உ௩௫) இளம்பிறை வாழ்கின்ற சடைமுடியையுடையசிவன் மகிழ்கின்ற கோயிலின் புறத்தே ஒரு பக்கத்தே வந்திருப்பச் சூரியன் அஸ்தமிக்க மாலையாகிய கடலைக்கண்டயர்வாராய்க் கன்னிகையாகிய சங்கிலியை மணம்புணர்க்கவேண்டிச் சிவன் தமக்கருளும் நண்பால் நினைந்து நினைந்து மனமழிய.

(உ௪உ) தகுந்த விதியையுடைய மணத்தால்.

(உ௪௩) பின்னல் முடியார்முன் - சடைமுடியையுடைய சிவனுக்கு முன்னரே. குன்றுததீபம் போல்வார் மிகநாணி வணங்கிக் கூறுவார், நிலையான திருவாரூரின்கண் அலர்மிகவும் மகிழ்ந்திருப்பது என்னுந்தன்மையை எம்பெருமானே அறிந்தருளும்.

(உ௪௪) ஒருசபதம் அற்ற முறுநிலைமையினால்—ஒருசத்தியத்தை (உன்மாட்டாசை பொருந்தலால் வந்த) சோர்வு பொருந்தும் நிலையால்.

(உ௪௯) சென்று கிடைத்து - சென்றடைந்து.

(உ௪௯) கோயில்விட - கோயில்விட்டு.

(உ௫க) வழியடிமைப் பெருமையை நினைத்தோ.

(உ௫௩) அற்றம் - சோர்வு. ஈண்டுச்சோர்வென்றது "அங்கு நமக்கெதிர்செய்யுமிதற்கு நீயிசையாதே." என்றதை.

(உ௫௫) நீங்கினதுயிலையுடைய தோழியர்க்கு "ஒற்றியூர்ப்புற நீங்கல்" என்ற எழுத்தை அறியுமவர்.

(உ௫௬) சுத்தமான பணிக்குரிய பொழுதாகத் தொண்டுசெய்வோருடன்போகக் கோயிலின் முன்காலமதுவேயாகக் குறித்தடைந்தார்.

(உசூ0) இவர் சொன்னபடியை மறுத்தால் இது அலராகினுமாகும். அவர் - பலரறிந்து புறங்கூறல்.

(உசூக) மூவாத - அழியாத.

(உசூ௫) ஆதிபுரியை ஒற்றிக்கொண்ட சிவனுட்கொண்ட-ஆதிபுரிதிருவொற்றியூரென்பது முன்னுங்காட்டப்பட்டது.

(உசூசூ) விழுகின்ற அவருக்கிடையே தோன்றியிருக்கின்றபுலவியும் புணர்ச்சியுமாகிய இவற்றின்கண் ஒரு கணம் ஊழியாம். அந்த ஊழி ஒரு கணமாம்.

(உஎக) பொலிந்த தமிழையுடைய பொதியமலையிற் பிறந்து, பொலிவாகிய சந்தனவாசனையில் அளாவி, (அருவியிடையறுதுசொரிதலால்) குளிர்ந்த சாரலில் வளர்ந்த செழித்த தென்றலானது அங்கேவர, திருவாரூர் வீதிவிடங்கப்பெருமானுனவர் உற்சவகாலத்தில் வசந்தோச்சவத்தை எதிர்கொண்டருளும் வகையை நம்பியாரூரர் நினைந்தார்.

(உஎஉ) வீதிவிடங்கப் பெருமானுடைய அழகிய நெற்றியையுடைய பெண்கள் பக்கத்தே பரந்த கொலுமண்டபத்தில்.

(உஎ௩) பிரியாதவிருப்பால் நினைந்த அன்பரை நினைவோரை. வசறவு - வருத்தம்.

(உஎ௫) முன்னரே கால் செல்லும் வழிகள் தோன்றுத.

(உஎசா) சூளுறவு - சத்தியம்.

(உஎசூ) காய்தல் - கோபித்தல்.

(தொடரும்.)

ஜி. சதாசிவம் பிள்ளை.

ஸ்ரீ:

# நுண்பொருண்மாலை.

(முற்றொடர்ச்சி.)

சூஅஅ. "தூய்மை..........பண்பு"

நு - லை:—இம்மூன்றொடு கூடிய மெய்ம்மையு மெனவிவையே இலக்கணமென்றதனானின் னொடுவின்பொருட்கண் வந்தது. புற நடைச் சூத்திரவிதியா லமையுமென்க.

சூகூச. "செவிச்சொல்லுஞ்..........ரகத்து."

நு - லை:—அவித்தொழுகல் பயனின்லை.

சூகூஅ. "இளைய..........படும்."

நு - லை:—பல்லோர் படர்க்கையென்னும் விலக்குப்பற்றியொ ழுகப்படுமென்பதனை யொழுகுதல் செய்யப்படுமென வொழுகுதலை யெழுவாயாக்கிச் செயப்படுமென்பதனைப்பயனிலையாக்கினதுகாண்க. "வஞ்சரையஞ்சப்படு" (அஉச) மென்பதுமது. "செழுங்கார் முழ வதிர்" என்னுங் கோவையாருள், (கடுஎ) "வழங்கா வதரின் வழங் கென்றுமோ வின்றெம் வள்ளலையே." யென்பதுமது.

எகக. "அவையறிந்..........யவர்."

நு - லை:—செஞ்சொல் இலக்கணைச்சொல் குறிப்புச்சொல் லென மூன்றுமடங்குதற்குச் சொல்லின்றொகையென்றார். "நோயு மின்பமு மிருவகை நிலையி" லென்னுஞ் சூத்திரவிதிபெற்றன இலக்க ணச்சொல். வாராமரபினவாகக் கூறுதலுமென்பன குறிப்புச்சொல். இவ்விரண்டு மல்லாதன செஞ்சொல். இலக்கணக் குறிப்பென்ப திவ் விரண்டுங் கூடிநிற்பது. இலக்கணமரு இலக்கணவழக்கு என்பன போலவென்க. இவையெல்லாங் காமத்துப்பாலுட் காண்க.

௭௨௦. "அங்கணத்து...........கொளல்."

நு - லை:—கொளல் - கொள்ளற்க; கொள்ளென்னு முதனிலைத் தொழிற்பெயர் விதிரேனின்று பின்னெதிர்மறைவிகுதியோடுகூடி "மகனெனல்போல" நின்றது, "அரங்கின்றி வட்டாடியற்றே"யென்பதுபோல வாராமையாலெனக. இவ்வுரையாசிரிய ருடம்பாட்டினை விதி யென்பர்; இதனுள் அற்றென்பது பெயரடுத்துநின்றதா லீண்டிவ்வாறுரைத்தார்; "வையத்திறந்தாரை யெண்ணிக்கொண்டற்று" என்பது முதலியவற்றெல்லாம் வினையையடுத்து வருதலின் இவ்வாறுரையாதொழிந்தாரெனக.

௭௨௩. "பகையகத்துச்........தவர்."

நு - லை:—அஞ்சாதுசாவா ரென்றுரைத்ததனுலு மஞ்சாது சொல்லவல்லாரென் றுரைத்ததனுலு மஞ்சாமை சாவாரென்பதனோடுங் கூடி அதனுற் சொல்லுவாரென்பது வருவிக்கப்பட்டதென்றார். அதனுலென்று சுட்டியது சாவாரென்றதனை.

௭௨௪. "கற்றூர்முற்........கொளல்."

நு - லை:—அவற்றினெனச் சுட்டியுரைத்தது தாங்கற்ற வென்பதனை.

௭௨௫. "வாளொடென்...........பவர்க்கு."

நு - லை:—நுண்ணவை இருந்தாரது நுண்மை அவைமேலேற்றப்பட்டது. நல்லவை புல்லவை யென்பவுமாம். அல்லாக்கால் நல்லாரவையஞ்சுவா ரென்பது போலவரும்.

௭௨௭. பகையகத்துப்.........நூல்."

நு - லை:—பேடியைப் பிடித்தவள் குற்றத்தாலெனப் பெண்பாலாயுரைத்தது, "ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி, யாண்மை யறிசொற் காகிட னின்றே" என்ற விதிபற்றியென்க. "பெண்ணவாயாணிழந்த பேடி யணியாளோ" (தொல், சொல் - ௬௨)என்பதுமது.

எ௩௧. "தள்ளா .........நாடு."

நு - லை:—மற்றை உயர்திணைப்பொருள்களோடுஞ் சேர்தற்றொழிலோடு மியையாமையின் வினையுள் வினையுளச்செய்வோரென உழவர்மேனின்றது.

எ௩௨. "பெரும்பொருளாற்......நாடு"

நு - லை:—பெட்டக்கது - விரும்பத்தக்கது. "செய்தக்க" என்பதுபோலப் பெள்ளென்னும் முதனிலைத்தொழிற்பெயர் செயவெனெச்சமானது காண்க. மிக்கபெயல், பெயலின்மை, யெலி, விட்டில், கிளி, பன்றி, புல்வாய், யானை, அரசண்மை, வேற்றரசெனக் கேடு; இவற்றை வடநூலார் ஈதிவாதை யென்பர்.

எ௩சு. "கேடறியாக்.........றலை."

நு - லை:—அறியாது குன்றுதவென்னும் வினையெச்சம் பெயரெச்சங்களினிறுதிநிலை விகாரமென்க.

எசா௩. "உயர்வகலந்.........றால்."

நு - லை:—"வரிவிற்பொறியுங்..............கருவிரற் கூகையு" மென்பன பாட்டுக்குறை.

எசஅ. "முற்றாற்றி.........தரண்"

நு - லை:—பற்றின்கண்ணே யெனவிரியும். வெல்வதென்பதுடையார் தொழிலின் மேனின்றது.

எருசு. "உறுபொருளு............பொருள்."

நு - லை:—உறுபொருள்-நெடுங்கால நிலத்திற்கிடந்து பின் கண்டெடுத்ததுந் தாயத்தார்பெறாதது மென்க. உல்குபொருள்-சுங்கப்பொருள். தெறுபொருள்-பகைவரைவென்றதிறை.

எசு௦. "ஒண்பொருள்.........மொருங்கு"

நு - லை:—காழ்த்தல்—முதிர்தல்.

(தொடரும்.)

பத்திராசிரியர்.